வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu    ඊළනාඩු

Email : news@eelanadu.lk    மலர் : 03    16.11.2022 புதன்கிழமை    இதழ் : 343    பக்கங்கள் : 16




## பதவி விலகலை பாப்பரசருக்கு அனுப்புகிறார் கர்தினால் ரஞ்சித்!



கொழும்பு, நவ. 16

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தனது பதவி விலகல் கடிதத்தை பரிசுத்த பாப்பரசருக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

பேராயர் மல்கம் ரஞ்சித்தின் 75ஆவது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடந்த இந்த பிறந்தநாள் விழாவில்

15

## 20 வீதமான மக்கள் நீரிழிவு நோய்க்கு இலக்காக நேரும்!

கொழும்பு, நவ. 16

நாட்டின் மொத்த சனத்தொகையில் 20 வீத மானவர்கள் 8 ஆண்டுகளில் நீரிழிவு நோயால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்று ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நீரிழிவு நோய் வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

நீரிழிவு நோயை முறையாகக் கட்டுப்படுத்தாவிட்டால் அது நேரடியாக கண்களையே பாதிக்கும் என தேசிய கண் மருத்துவமனையின் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## இரு தரப்பும் அழைத்தால்

# இலங்கை பிரச்னையில் மத்தியஸ்தத்துக்கு தயார்!

### நோர்வே தூதுவர் தெரிவிப்பு



சென்னை, நவம்பர் 16

**இலங்கையின் இனப் பிரச்னைக்கு காரணமான இரு தரப்புகளிலிருந்தும் அழைப்பு வந்தால் மீண்டும் நோர்வே மத்தியஸ்தம் வகிக்கும் என்ற சாரப்பட கருத்து வெளியிட்டுள்ளார் இந்தியாவுக்கான நோர்வை தூதுவர் ஹான்ஸ் ஜேக்கப் பிரைடன்லண்ட்.**

இந்தியாவுக்கான நோர்வே தூதுவர் நேற்றுமுன்தினம் இந்தியாவின் பிரபல நாளிதழான இந்து பத்திரிகை குழுமத்துக்கு சென்றிருந்தார். அங்கு ஆசிரியர் குழுவை சந்தித்தார். இதன்போது அவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இலங்கையில் இனப் பிரச்னை உள்ளிட்ட பிரச்னைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்க நோர்வே ஆர்வம் காட்டுமா என்ற கேள்விக்கு பதிலளித்த நோர்வே தூதுவர்,

இரு தரப்புகளில் இருந் தும் அழைக்கப்படாமல் நாங்கள் செல்லமாட்டோம். இரு தரப்பில் இருந்தும் அழைக்கப்படாவிடின் நாங்கள் அதனைக்

15

## பால் புரைக்கேறி குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், நவ. 16

பால் புரைக்கேறியதில் பிறந்து 42 நாட்களேயான குழந்தை உயிரிழந்தது.

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தை சேர்ந்த ராஜதீபன் டேனுயன் என்ற குழந்தையே இவ்வாறு மரணமடைந்தது.

நேற்று முன்தினம் இரவு பால் குடித்துவிட்டு குழந்தை தூங்கியது. நேற்று அதிகாலை குழந்தையை பெற்றோர் பார்த்தபோது மூக்காலும் வாயாலும் இரத்தம் வந்திருந்தது.

15

## பலாலி விமான நிலையம் வருட இறுதிக்குள் இயங்கும்

### யாழ். வந்த இராஜாங்க அமைச்சர் உறுதி!

யாழ்ப்பாணம், நவ. 16

இந்தியாவுடனான சமரசப் பேச்சுகள் நிறைவடைந்து விட்டன. ஓரிரு மாதங்களில் பலாலி விமான சேவை ஆரம்பிக்கப்படும். இதே போன்று, இலங்கை - இந்தியா பயணிகள் கப்பல் சேவையையும் ஆரம்பிக்க இந்திய அரசுடன் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் வந்த



துறைமுகங்கள், விமான சேவைக ள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்தார்.

காங்கேசன்துறை துறைமுகம், பலாலி சர்வதேச விமான நிலையை

15

## படையினருக்கு காணி சுவீகரிப்பு; எதிர்ப்பால் சூமில் நடந்தது கூட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 16

வடக்கு மாகாணத்தில் நிலைகொண்டுள்ள படையினருக்குக் காணி சுவீகரிப்பதில் உள்ள இடையூறுகள் தொடர்பில் ஆளுநர் கூட்டிய பிரதேச செயலர்களுடனான கூட்டத்துக்கு தடை ஏற்பட்டதை தொடர்ந்து மெய்நிகர் வழியில் அந்தக் கூட்டத்தை நடத்தினார் ஆளுநர்.

இந்தக் கூட்டத்துக்கு நேற்றைய தினம்

15

## 20ஆம் திகதி வருகிறார் பஸில்

கொழும்பு, நவ. 16

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளை தொடர்ந்து பதவி விலகி, பின்னர் அமெரிக்காவுக்கு சென்ற பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் 20ஆம் திகதி நாடு திரும்புகிறார் என்று அறிய வருகிறது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி கடும்

15

## தமிழ்க் கட்சிகளின் கூட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 16

கொழும்பில் நேற்று நடைபெறவிருந்த தமிழ் கட்சிகளின் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது. கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட முறைமை குறித்து விமர்சனங்கள் எழுந்த நிலையிலேயே இந்த சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

இதேவேளை, இந்த சந்திப்பை அனைவரும் கூடக்கூடிய வகையில் பொது இடத்தில் நடத்துமாறு ஆலோசனை வழங்கியுள்ள இரா. சம்பந்தன், இந்தக் கூட்டம் எங்கு நடந்தாலும் பங்கேற்க தான் தயாராக இருக்கிறார் என்றும் தன்னை சந்தித்த எம். ஏ. சுமந்திரன், மாவை

15

# தமிழரின் பிரச்னை தீர்வுக்கு ஐ. நாவின் பங்களிப்பு தேவை!

### ஐ. நா. பிரதிநிதிகளிடம் கூட்டமைப்பினர் வலியுறுத்து

கொழும்பு, நவ. 16

"வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்னைகளுக்கும் விரைந்து தீர்வு காணப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பு மிகவும் காத்திரமாக இருக்க வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

கொழும்பில் பல இடங்களிலும் யாழ்ப்பாணத்து சாப்பாடு சாப்பிடுவதற்கு பல சாப்பாட்டுக் கடைகள் முன்னர் இருந்தன.

கொழும்பில் பல ஒழுங்கைகளில் இருக்கும் இந்த சாப்பாட்டுக் கடைகளில் கொழும்பில் தங்கியிருந்து பணியாற்றும் யாழ்ப்பாணத்து அரச ஊழியர்கள் சாப்பிடுவது வழக்கம்.

குடும்பத்தை யாழ்ப்பாணத்தில் வைத்துக்கொண்டு தனியன்களாக கொழும்பில் பணியாற்றும் பலர் மாதத்தில் ஒரு தடவை யாழ்ப்பாணம் வந்துசெல்வார்கள்.

அப்படி கொழும்பில் வாழும் அரச உத்தியோகத்தர்களுக்கென்றே இதுபோன்ற பல சாப்பாட்டுக் கடைகள் கொழும்பில் இயங்கிவந்தன. ஆமர் வீதியில், கொம்பனித் தெருவில், வெள்ளவத்தையில் என்று பல இடங்களில் அப்படி இயங்கியதுண்டு.

ஒருவர் எவ்வளவு தரம் வேண்டுமானாலும் வாங்கி சாப்பிடலாம். பொதுவாக மாதாந்த ஊதியம் பெறும் அரச உத்தியோகத்தர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலையிலேயே சாப்பாடு கிடைக்கும்.

எவ்வளவு தரம் கேட்டாலும் சோறு போடுவார்கள் என்பதற்காக மூன்றாவது தடவையும் சோறு கேட்பவர்களும் உண்டு.

இரண்டு தடவை வயிறுமுட்ட சாப்பிட்ட பின்னர், அவர் இலையில் சோறு முடிகின்ற நேரத்தில் சோறு பரிமாறும் பையனிடம் பட்டறையில் (காசுப் பெட்டியில்) இருக்கும் முதலாளி பலத்த குரலில் அவருக்கு சோறு போடு என்பார்.

பையனுக்கு அவர் இரண்டாவது தடவையும் போட்டு சாப்பிட்டு விட்டது தெரியும். அவன் பலத்த குரலில் சொல்வான், ‘இதுக்கு மேலை ஒரு மனுசன் சாப்பிட ஏலுமே?’ என்று.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் மூன்றாவது தடவையும் கொஞ்சம் சாப்பிடுவோம் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்திருப்பார். ஆனால், பையன் அப்படிச் சொன்ன பிறகு எப்படிக் கேட் பது, கையை போதும் என்று காட்டிக் கொண்டே எழுந்து சென்று கைகளைக் கழுவுவார்.

சாப்பாட்டுக் கடையில் சோறு பரிமாறும் அந்த பையனின் சமயோசித பதில்தான் அந்தச் செய்தியை படித்தபோது ஞாபகத்துக்கு வந்தது.

‘நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையில் அமைச்சுப் பதவிகளை மனசாட்சியுள்ள எவரும் பொறுப்பேற்க மாட்டார்கள்’ என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையிலும் அமைச்சுப் பதவிகள், வரப்பிரசாதங்களை எவ்வாறு அனுபவிக்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதான் அந்த செய்தி.

சில நாட்களுக்கு முன்னர், எதிர்க்கட்சித் தலைவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இரகசிய சந்திப்பு ஒன்று நடைபெற்றிருந்தது.

அந்தச் சந்திப்பில் சஜித் விடுத்த ஒரே கோரிக்கை, தனது கட்சியில் இருப்பவர்களை அமைச்சுப் பதவிகளைக் காட்டி தன்னிடமிருந்து பிரிக்கின்ற வேலையைச் செய்யவேண்டாம் என்பதே.

அப்போது ரணில், தான் அப்படி யாரையும் வாருங்கள் என்று அழைக்கவில்லை என்றும் அவர்களாகவே தன்னுடன் வந்து சேர விரும்புதாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர் எனவும் தெரிவித்திருக்கிறாராம்.

அமைச்சரவை மாற்றம் குறித்து பல வாரங்களாக எதுவித அறிவிப்புகளையும் காணவில்லை. பொதுஜன பெரமுன தரப்பில் கொடுக்கப்பட்ட பட்டியலில் நால்வருக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்ட ஜனாதிபதி, அவர்கள் கொடுத்த பட்டியலில் இருந்து சிலருக்குப் பதவி வழங்குவதோடு, தன்னோடு இணைய விரும்பும் எதிரணியினர் சிலருக்கும் தமது கட்சியின் வஜிர அபேவர்த்தன மற்றும் சிறிய கட்சிகளைச் சேர்ந்த ஜீவன் தொண்டைமான், அதாவுல்லா போன்றவர்களுக்கும் அமைச்சுப் பதவி வழங்க தீர்மானித்து விட்டபோதிலும், தற் போது தாக்கல் செய்யப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறிய பின்னரே இந்த நியமனங்களைச் செய்யவிருக்கிறார் என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

பொதுஜன பெரமுனவில் சிலருக்கு பதவிகளை வழங்குவதன் மூலம் சிலரின் எதிர்ப்பைச் சந்திக்கவேண்டிவரும் என்பதாலும் அது வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என்றும் ஜனாதிபதி தரப்பில் ஆலோசிக்கப் பட்டு வருகின்றதாம்.

பெரமுனகாரருக்கு வழங்குவதை தாமதப்படுத்தினாலும் மற்றக் கட்சிக்காரர்களுக்காவது உடனடியாக வழங்கினால் என்ன என்ற யோசனையும் ஜனாதிபதி தரப்புக்கு வைக்கப்பட்டிருப்பதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையிலேயே, தனது கட்சியிலிருந்து சில முக்கிய தலைவர்கள் ரணில் தரப்புக்கு செல்லப்போவது உறுதியாகி விட்ட நிலையிலேயே, அவர்களின் மனச்சாட்சியை உலுப்பிப் பார்க்கும் வகையில் சஜித் கருத்து தெரிவித்திருக்கிறார் என்று நம்பப்படுகின்றது.

தன்னுடனிருப்பவர்களில் எவருக்கெல்லாம் மனச்சாட்சி இருக் கின்றது என்று சோதித்துப்பார்க்கிறாரோ என்னவோ?

நாமும் தான் பொறுத்திருந்து பார்ப்போமே.!

**- ஊர்க்குருவி**

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 16 பேருக்கும் விளக்கமறியல்

மட்டக்களப்பு, நவ. 16

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சி பெற்றனர் மற்றும் அவருடன் தொடர்பைப் பேணி வந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியில் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த 16 பேரின் விளக்கமறியல் உத்தரவை எதிர்வரும் 29ஆம் திகதிவரை நீடித்து, மட்டக் களப்பு நீதவான் நீதிமன்ற நீத வான் பீற்றர் போல், நேற்று உத்தரவிட்டார்.

2019 ஏப்ரல் 19ஆம் திகதி தாக்குதலில் ஈடுபட்ட சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்க ளுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியை சேர்ந்தவர்கள், சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 66 பேரை கைது செய்யப்பட்டனர்.

காத்தான்குடி பொலிஸார் தாக்கல் செய்ய வழக்கில் இருந்து 3 பேர் விடுவிக்கப்பட்டனர். 47 பேருக்கு பிணை வழங்கப்பட்டதுடன், 16 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பிணை வழங்கப்பட்ட 47 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 16 பேரும் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட உத்தரவைப் பிறப்பித்த நீதிவான், அனைவரையும் அடுத்தவருடம் ஜனவரி 31 திகதி நீதிமன்றில் முற்படுத்த உத்தரவிட்டார். (ஐ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 16

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்பு சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் ‘அருள் பெரும் ஜோதி’ என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# ஆலயத்தில் திருடிய இளைஞர் சிக்கினார்

வடமராட்சி, நவ. 16

வடமராட்சி துன்னாலை தெற்கு பூதேஸ்வரன் சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து திருடப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்று நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி ஆலயத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கதவு உடைக்கப்பட்டு ஆலயத்தில் இருந்த சமையல் பாத்திரங்கள் மற்றும் மின் உபகரணங்கள் என்பன திருடப்பட்டு இருந்தன.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸாருக்கு நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்று கிடைத்தது.

இதற்கமைய பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீரவின் ஆலோசனைப்படி உபபொலிஸ் பரிசோதகர் ரட்நாயக்கா தலைமையிலான பொலிஸ் குழுவினர் துன்னாலையைச் சேர்ந்த 22 வயது இளைஞர் ஒருவரை கைது செய்தனர். அத்துடன், அவரிடம் இருந்து திருடப்பட்ட சமையல் பாத்திரங்கள் மற்றும் மின் உபகரணங்களையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ-02)

# வாகனங்களை பதிவு செய்தோர் இலக்கத் தகடுகளை பெறலாம்!

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்துக்கு தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 10ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதனை பிரதேச செயலகங்களிலும் dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிட முடியும்.

021 211 7116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து, அதற்காக தங்கள் கைபேசிக்கு டி. எம். ரி.ஆல் அனுப்பப்பட்ட குறுந் தகவலுடன் புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை, என்பவற்றையும் மாகாணங்களுக்கு இடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும்தாள் (ஸ்ரிக்கர்) என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்துக்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்கு உரிய இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். சிவஹரன் அறிவத்துள்ளார். (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

“கூட்டுப் பறவைகளின் கூக்குரலோடு வீழும்
கானகத்தின் மரண ஓலம் மலைகளில் முட்டும்
வாகனம் எட்டும் காதுக்குக் கேட்காது கடைசி மட்டும்”

*- கவிஞர் இன்குலாப்.*

# திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், நவ. 16

ஈழத்துச் சிதம்பரம் என்று சிறப்பாக அழைக்கப்படும் காரைநகர் சிவன் ஆலய மடத்தில் நாளை வியாழக்கிழமை காலை 7 மணி முதல் திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த திருவாசக முற்றோதல், நாடும் மக்களும் படுகின்ற துன்பங்கள் அகலவும் இன்றைய இளைஞர்கள் போதைவஸ்து பாவனை எனும் துர்பழக்கத்திலிருந்து விடுபடவும் சைவ ஆலயங்கள், சைவர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஏற்படும் இடர்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் விடுபடவும் வேண்டி நடைபெறுகிறது.

இந்த நிகழ்வில் பங்கேற்கும் அடியார்களுக்கு திருமுறை நூல்கள் அன்பளிப்பாக அளிக்கப்படும். அத்துடன், இந்த நிகழ்வில் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
16.11.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பனிப் போர் அரசியல்?

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சீனாவுடன் பனிப் போரில் ஈடுபடப் போவதில்லையென்று தெரிவித்திருக்கிறாரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இந்தோனேசியாவில் இடம்பெறும் ஜி -20 மகாநாட்டில் பங்குகொள்வதற்காக சென்றிருக்கும் பைடன், சீன ஜனாதிபதி ஸீ ஜின் பிங்குடன் பேச்சில் ஈடுபட்டிருந்தார். இதன்போதே, குறித்த அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கின்றார். இதேவேளை, தாய்வான் விடயத்தில் அமெரிக்க கொள்கையில் மாற்றமில்லையென்று குறிப்பிட்டிருக்கும் பைடன், தாய்வானை சீனா தாக்கினால் அமெரிக்கா தாய்வானைப் பாதுகாக்கும் என்றும் தெரிவித்திருக்கிறார் என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. மேற்படி கருத்துகள் ஒன்றுகொன்று முரண்பாடானாவை. ஏனெனில், சீனாவுடன் பனிப்போர் இல்லையென்று கூறும் அதேவேளை, சீனாவின் ஒரு சீனக் கொள்கையை தாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென்றும் தெரிவித்திருக்கின்றார். அண்மையில் மூன்றாவது தடவையாக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய காங்கிரஸின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங் தாய்வானை சீனாவுடன் இணைத்தே தீருவேன் என்று சூளுரைத்திருந்தார்.

இரண்டு நாடுகளின் நிலைப்பாடுகளிலும் மாற்றம் இல்லாத போது பனிப்போரை எவ்வாறு தவிர்க்க முடியும்? உண்மையில் பனிப்போர் அரசியலை நோக்கி உலகம் நகர்ந்துவிட்டதாகவே சில மேற்கத்தைய அரசியல் சிந்தனையாளர்கள் கூறுகின்றனர். இன்னும் அவ்வாறானதொரு நிலைமையை நோக்கி உலகம் நகரவில்லை என்பது சிலரின் அவதானமாக இருக்கின்றது. ஆனால், சீனாவின் எழுச்சியை எதுவரையில் அமெரிக்காவால் சகித்துக்கொள்ள முடியும்? இன்றைய சர்வதேச அரசியல் விவாதங்களில் இதுவே அடிப்படையான கேள்வியாக இருக்கின்றது.

பனிப்போர் என்பது உலகம் இரண்டு முகாம்களாக இருந்த காலத்தின் அரசியல் விவாதமாகும். சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்தே பனிப்போர் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் அமெரிக்காவே உலகின் ஒரேயொரு சக்தியாக எழுச்சியுற்றது. சீனாவின் எழுச்சி இந்த உலக ஒழுங்கில் மாற்றங்களை ஏற்படுத்தி வருவதான பார்வை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. 2050இல் உலகின் முதல் பொருளாதார சக்தியாக சீனா எழுச்சியடைந்துவிடும் என்னும் கணிப்புகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில்தான் அமெரிக்க - சீன முரண்பாடுகளை தவிர்க்க முடியாதென்னும் வாதம் முன்வைக்கப்படுகின்றது.

இன்றைய நிலையில், அமெரிக்காவின் உலக ஆதிக்கத்தில் சில மாற்றங்கள் இருந்தாலும்கூட இப்போது வரைக்கும் உலகின் முதல் சக்தி அமெரிக்காதான். இராணுவ பலத்தில் அமெரிக்காவுக்கு நிகராக எந்தவொரு நாடும் இல்லை. அமெரிக்காவின் வருடாந்த இராணுவ செலவீனம், 715 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். சீனாவின் வருடாந்த இராணுவ செலவீனம் 150 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். சீனாவின் உண்மையான செலவீனத்தை சீனா மறைத்து வைத்திருகின்றது என்றவாறான பார்வையும் உண்டு. ஆனால், தற்போது சீனா அதன் இராணுவ பலத்தை, முக்கியமாக கடற்படை பலத்தை அதிகரித்து வருகின்றது. குறிப்பாக தென்சீனக் கடலில் சீனாவின் கடற்படை ஆதிக்கம் வேகமாக விரிவுபடுத்தப்படுகின்றன. இந்த பின்புலத்தில்தான், கடந்த ஒரு தசாப்த காலமாக இந்து சமுத்திர பிராந்தியத்திலும் சீனா அதன் செல்வாக்கை விஸ்தரித்து வருகின்றது. இந்த பின்புலத்தில்தான் இலங்கை - சீன உறவுகள் முக்கியம் பெறுகின்றது. ஒரு மேலாதிக்க சக்தியாக (கெஜிமொனிக் பவர்) எழுச்சியுறுவதே சீனாவின் இலக்கென்று நோக்கப்படுகின்றது. இன்றைய நிலையில் அமெரிக்கா மட்டும்தான் உலகின் ஒரேயொரு மேலாதிக்க சக்தியாகும்.

இவ்வாறனதொரு சூழலில்தான் - இன்று என்னதான் கூறிக்கொண்டாலும்கூட, ஒரு கட்டத்தில் அமெரிக்காவும் சீனாவும் பனிப்போருக்குள் செல்ல வேண்டியதைத் தவிர்க்க முடியாதென்று கூறப்படுகின்றது. சீனாவுடன் பனிப்போரில் ஈடுபட வேண்டிய தேவை இல்லையென்று கூறும் பைடன், மறுபுறம் தாய்வானை சீனா தாக்கினால் தாங்கள் தாய்வானை பாதுகாப்பதற்காக தலையிடுவோம் என்றும் கூறுகின்றார். இது எதனை உணர்த்துகின்றது? பனிப்போரா அல்லது இல்லையா என்பது சீனாவின் நடவடிக்கைகளில்தான் தங்கியிருக்கின்றது.

# கார்த்திகை மாதமும் புனித ஐயப்ப விரதமும்

**ஐயப்பன் விரதம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. அதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

**சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா**

கார்த்திகை மாதம் தொடங்கியதும் இலங்கையிலுள்ள ஐயப்ப பக்தர்கள் அனைவரும் ஐயப்ப பக்தியில் மூழ்கி போகின்றனர். இவர்கள் ஐயப்பனுக்காக மாலை அணிந்து பக்திச் செறிவுடன் ஐயப்பன் நாமத்தை சொல்லி விரதம் அனுஷ்டிக்கிறார்கள். ஐயப்பன் கலியுக வரதன், கலிகால தோஷத்தை அகற்ற ஐயப்பனை தரிசித்தால் போதும் என்கின்ற உணர்வு மேலோங்குகிறது.

ஆண்டுதோறும் இருமுடி ஏந்தி சபரி மலைக்கு புனித யாத்திரை செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகிறது. கடுமையான முறையில் அனைத்து விதமான விரதங்களையும் கடைப்பிடிக்கும் மாலையிட்ட ஐயப்ப பக்தன், சுவாமி ஐயப்பனின் பரிபூரண அனுக்கிரகம் பெற்றிருப்பதால் பக்தனையே ஐயப்பன் அவதாரமாக மற்றவர்கள் மதிக்கிறார்கள் என்பதே நிதர்சனமான உண்மை.

மாலை அணிந்து விரதம் இருந்து சபரி மலை செல்வோர் மேற்கொள்ள வேண்டிய விரத முறைகள், சபரிமலை செல்ல விரும்புவர்கள் கார்த்திகை மாதம் முதல் நாள் அல்லது 19ஆம் திகதிக்குள்ளே ஒருநாளில் மாலை அணிய வேண்டும். கார்த்திகை மாதம் முதல் நாள் மாலை அணிந்தால் நாள் பார்க்க வேண்டாம். அதற்குப் பின் அணிபவர்கள் நல்ல நாள் பார்த்து மாலை அணிய வேண்டும். எப்படி இருந்தாலும் குறைந்தது 41 நாட்கள் விரதம் இருக்க வேண்டும். மாலை துளசி மணி 108 கொண்டதாகவோ ஓர் உருத்ராட்சை மணி 54 உள்ளதாகவோ வாங்கி அதில் ஐயப்பன் திருவுருவம் பதித்த டாலர் ஒன்றை இணைத்து அணிய வேண்டும்.

தாய், தந்தையின் நல்லாசியுடன் குருசாமி ஒருவரின் கையால் ஆலயத்தில் பூஜை செய்து மாலை அணிய வேண்டும். குருசாமி கிடைக்காவிட்டால் கோவில் சென்று கடவுள் பாதத்தில் மாலையை வைத்து அர்ச்சகரிடம் குருதட்சணை கொடுத்து அர்ச்சனை செய்து ஐயப்பனையே குருவாக நினைத்து மாலையை தரிசித்துக் கொள்ளலாம்.

இது எதுவுமே முடியாவிட்டால் கடவுளின் பிரதிநிதியான தனது தாயிடம் ஆசிர்வாதம் வாங்கிய அவர்களது கையால் மாலையை அணிந்து கொள்ளலாம். இவ்வாறு மாலை அணிந்த பின்பு கோபதாபம், குரோதம் கொள்ளக்கூடாது. சிநேகம் பாராட்டி பணிவுடன் பழக வேண்டும். இயற்கையின் படைப்புகள் எல்லாவற்றையுமே இறைவனின் சொரூபமாகப் பார்க்க வேண்டும். காலையில் சூரிய உதயத்துக்கு முன்பும் மாலையிலும் குளிர்ந்த நீரில் நீராடி கோவில்களிலோ வீடுகளிலோ ஐயப்பனை மனதார நினைத்து சரணங்கள் கூறி வணங்க வேண்டும்.

கறுப்பு ,நீலம் ,காவி, பச்சை நிற வெட்டி சட்டை அணிய வேண்டும். பிரம்மச்சாரிய விரதத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். மாலையை எக்காரணம் கொண்டும் கழற்றக் கூடாது. இரத்தம் சம்பந்தப்பட்டவர்களின் மரணம் ஏற்பட்டால் குருசாமியிடம் சென்று மாலையை கழற்றிய பிறகு துக்கத்தில் கலந்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு காரணத்தால் மாலையை கழற்ற நேர்ந்தால் அந்த ஆண்டு சபரிமலை செல்லக் கூடாது. பெண்களின் சடங்கு வைபவத்துக்கோ - குழந்தை பிறந்த வீட்டுக்கோ செல்லக்கூடாது. மது, மாமிசம், புகைத்தலை விட்டுவிட வேண்டும்.

மாலை அணிந்த பக்தர்களின் வீட்டில் சாப்பிடலாம். மற்றவர்கள் வீட்டில் பால், பழம் சாப்பிடலாம். வீட்டுப் பெண்களுக்கு மாலை அணிந்த காலத்தில் மாதவிடாய் ஏற்பட்டால் ஏழு நாட்கள் கழித்த பின்னர் தான் அவர்கள் சமைத்த உணவை உண்ண வேண்டும். காலணிகள் பயன்படுத்தக்கூடாது. கன்னிச்சாமிகள் தங்களின் வசதிக்கேற்ப வீடுகளில் பூஜைகள் நடத்தி ஐயப்பன்மார்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம் செய்யலாம்.


எதிர்ப்படும் ஐயப்ப பக்தர்களை ஐயப்பனாகவும் பெண்களை மாளிகை புறத்தம் பிக்கையாகவும் கருதிப் பழக வேண்டும்.

மற்றவர்களிடம் பேசும் பொழுது சாமி சரணம் எனத் தொடங்கி விடைபெறும் பொழுது சாமி சரணம் எனக் கூற வேண்டும். இருமுடி கட்டு பூஜையை வீட்டிலோ குருசாமி இடத்திலோ கோவில்களிலோ வைத்து நடத்த வேண்டும்.

சபரிமலை பயணம் புறப்படுகையில் யாரிடமும் போய் வருகிறேன் எனக் கூறக் கூடாது. பம்பை நதியில் நீராடும்போது மறைந்த தனது முன்னோர்களை நினைத்து நீராட வேண்டும். யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் ஐயப்பனின் அருள் பிரசாதக் கட்டை தலையில் ஏந்தியப்படியே வீட்டு வாயிலின் படியில் விடலை தேங்காய் அடித்து வீட்டில் உள் நுழைய வேண்டும்.

வீட்டில் பூஜை அறையில் பூஜை செய்து கட்டைப் பிரித்து பிரசாதத்தை விநியோகம் செய்ய வேண்டும். யாத்திரை இனிய முறையில் நிறைவுற்ற பின் குருநாதர் அல்லது தாயார் மூலம் மாலை கழற்றும் போது சொல்லும் மந்திரத்தை கூறி மாலையை கழற்றி சந்தனத்தில் நனைத்து ஐயப்பன் திருவுருவப் படத்துக்கு முன்னால் வைத்துவிட்டு தீபாராதனை காட்டி விரதம் முடிக்க வேண்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

செயல்களில் சில சங்கடம் தோன்றும்.முயற்சியில் இழுபறி உண்டாகும். உதவி புரிவதாக சொன்னவர்கள் விலகிச் செல்வர்.குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். எதிர்பார்த்த நன்மை கிடைக்காமல் போகும்.

**இடபம்**

சட்டரீதியான பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். நெருக்கடிகள் விலகும். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.வியாபாரத்தில் பிரச்னையை சரிசெய்வீர்கள். குடும்பத்தினர் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**மிதுனம்**

நிதானமுடன் செயல்படுவது அவசியம்.குடும்பத்தினர் தேவையை நிறைவேற்றுவீர்கள். வரவு செலவில் கவனம் தேவை.வழக்கமான பணிகளில் மட்டும் கவனம் செலுத்துங்கள். புதிய முயற்சியை தவிர்க்கவும்.

**கடகம்**

மனமகிழ்ச்சிக்கான சூழல் உருவாகும். சிந்தித்து செயல்படுவீர்கள். செலவு கட்டுப்படும். எதிர்பாராத வரவு உண்டாகும்.உங்கள் அணுகுமுறையை மாற்றி செயல்படுவீர்கள். பெரியோர் ஆதரவு உண்டு.

**சிம்மம்**

திட்டம் தீட்டி அதை செயல்படுத்த முயற்சிப்பீர்கள். எதிர்பாராத செலவால் சிரமப்படுவீர்கள். உங்கள் கவனம் தடுமாறும்.அரசு வகையிலான முயற்சி தள்ளிப்போகும். புதிய முதலீடு செய்வதை தவிர்க்கவும்.

**கன்னி**

எண்ணம் நிறைவேறும். இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும். விருப்பங்கள் நிறைவேறும். எதிர்பாராத பண வரவால் பழைய கடன்களை அடைப்பீர்கள். பொன் பொருள் வரவு மகிழ்ச்சி தரும்.

**துலாம்**

வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். வேலை தேடும் முயற்சியில் தீவிரம் காட்டுவீர்கள். விவேகத்துடன் செயல்பட்டு நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

**விருட்சிகம்**

பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். வெற்றி காண்பீர்கள். தடைகளைத் தாண்டி சாதிப்பீர்கள். மற்றவரால் முடியாததைக் கூட முடித்துக் காட்டுவீர்கள். குடும்ப பிரச்னையை லாவகமாக கையாள்வீர்கள்.

**தனுசு**

உறவுகளால் சங்கடத்தை சந்திப்பீர்கள். அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்ததை அடைய முடியாமல் போகும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். எதிரியால் சங்கடத்திற்கு ஆளாகலாம்.

**மகரம்**

நவீன பொருள் வாங்குவீர்கள். தம்பதிகளுக்கிடையே பிரச்னைகள் தீரும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவீர்கள்.மனதில் தடுமாற்றம் ஏற்படும். முக்கிய வேலைகளையும் தள்ளிப்போடுவீர்கள்.

**கும்பம்**

முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்ப்பு விலகும். அந்தஸ்து உயரும்.உறவினர் மத்தியில் செல்வாக்கு கூடும். அலட்சியம் செய்தவர்கள் உங்களைப் பாராட்டுவர்.எதிர்பார்த்த ஆதாயத்தை அடைவீர்கள்.

**மீனம்**

செயல்களை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். பணியாளர்களுக்கு புதிய பொறுப்பு கிடைக்கலாம். உடல்நிலை அதிருப்தி அளிக்கும். வீண் விவாதங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

# பழனிசாமி, பன்னீரின் நடவடிக்கைகள் அ.தி.மு.கவின் பலவீனத்தை காட்டுகிறது!

## தொண்டர்கள் ஆதங்கம்

*மதுரை, நவ. 16*

பிரதமர் மோடி எங்களிடம் மட்டுமே பேசினார், நலம் விசாரித்தார் என்று மற்றொரு கட்சியின் தலைவரை சந்தித்ததை பழனிசாமி, பன்னீர்செல்வம் அணி நிர்வாகிகள் பெருமை பாராட்டிப் பேசுவதும் அவர்களுக்காக தவம் கிடப்பதும் அ. தி. மு. க. பலவீனப்பட்டிருப்பதை காட்டுவதாக அக்கட்சித் தொண்டர்கள் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.

ஜெயலலிதா இருந்தபோது தேசிய அளவில் அ. தி. மு. க. 3ஆவது பெரிய கட்சியாகவும், மாநிலத்தில் தி. மு. கவை விட அதிக வாக்கு வங்கி உள்ள கட்சியாகவும் திகழ்ந்தது. ஜெயலலிதாவின் ஆளுமை, அவர் கட்சியை கட்டுக்கோப்பாக வழிநடத்திய விதம் ஆகியவற்றைப் பார்த்து, அனைத்துக் கட்சியினரும் வியந்தனர்.

மோடி உள்ளிட்ட தேசிய தலைவர்கள்கூட சென்னை வந்தால் ஜெயலலிதாவின் போயஸ் கார்டனுக்குச் சென்று சந்திக்கும் நிலை இருந்தது. ஆனால், இன்று பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டவர்கள் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட பாஜக தலைவர்கள் தமிழகத்துக்கு எங்கு வந்தாலும் அவர்களை பா. ஜ. கவின் 2ஆம் கட்டத் தலைவர்கள்போல் ஓடோடிச் சென்று பார்ப்பதும், அவர்களை சந்தித்ததைப் பெருமையாக வெளியே பேசுவதும் அ. தி. மு. கவை பலவீனப்படுத்துவதாக அக்கட்சித் தொண்டர்கள் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.

# திருச்சி முகாமில் அடைக்கப்பட்ட நால்வரும் விரைவில் விடுதலை!

*திருச்சி, நவ. 16*

திருச்சி சிறப்பு முகாமில் இருந்து முருகன், சாந்தன் உள்ளிட்ட 4 பேரையும் இன்னும் 10 நாட்களில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப் குமார் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று, உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தன், முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை மாவட்ட ஆட்சியர் நேற்று சென்று பார்வையிட்டு அவர்களை குறைகளை கேட்டறிந்தார். இதன்பிறகு செய்தியாளர்களிடம் கருத்து கூறிய அவர்,

ரொபேபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் தாங்கள் தங்கியுள்ள இடத்திலிருந்து வெளியில் நடந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என்றனர். விரைவில் அதற்கு ஏற்பாடு செய்து தருவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கேட்ட பிற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இவர்களை மீண்டும் அவர்களது நாட்டுக்கு அனுப்புவதற்கான அனுமதிக் கடிதம் பெற 10 நாட்கள் ஆகும் என எதிர்பார்க்கிறோம். 4 பேரில் ஒருவர் (முருகன்) மட்டும் இலங்கை செல்ல விரும்பவில்லை. அவர் மீது மேலும் ஒரு வழக்கு உள்ளது. அந்த வழக்கு இன்னும் 10 நாட்களுக்குள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கிறோம். எனவே, அவருக்கும் சேர்த்து, 10 நாளில் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான அனுமதிக் கடிதத்தை பெற முயற்சி செய்து வருகிறோம் - என்றார். (ஐ)

# விடுதலையானோரை மீண்டும் சிறையிலடைக்க மறுசீராய்வு மனு!

## காங்கிரஸ் கட்சி தெரிவிப்பு

*புதுச்சேரி, நவ. 16*

“ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்ற வாளிகளை மீண்டும் சிறையில் அடைக்க மத்திய அரசு உச்ச நீதி மன்றத்தில் மறு சீராய்வு மனுவை தாக்கல் செய்யாவிட்டால் காங்கிரஸ் சார்பில் தாக்கல் செய்யப்படும்” என புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி கூறியுள்ளார்.



நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர்,

“ராஜீவ் கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டோருக்கு தமிழக அரசால் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது, இவர்கள் தமிழக ஆளுநருக்கு தங்களை விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்தனர். ஆளுநர் எந்த முடிவும் எடுக்காததால் பின் அந்தக் கோப்பு குடியரசு தலைவருக்கு அனுப்பப்பட்டு அதனை குடியரசுத் தலைவர் நிராகரித்தார்.

மீண்டும் கொடுத்த மனுவை ஆளுநர் காலதாமதப்படுத்தினர் என உச்ச நீதிமன்றம் ராஜீவ் காந்தி வழக்கில் உள்ள பேரறிவாளனை விடுதலை செய்தனர். இதனை மேற்கோள் காட்டி 6 பேரும் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என கோரியதால் தண்டனை இரத்து செய்யப்பட்டுள்ளது. இது காங்கிரஸாருக்கு அதிர்ச்சியும் மனவேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் தலைவரை கொன்ற வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற வர்கள், ஆயுள் முழுவதும் சிறையில் இருக்க வேண்டும்.

ஆளுநர் உரிய நேரத்தில் முடிவெடுக்காததும், மத்திய அரசின் அலட்சியமுமே விடுதலை செய்ய ஏதுவாக இருந்துள்ளது. தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி தற்போது விடுதலை செய்வது ஏற்றுக் கொள்வதாக இல்லை. இது ஜனநாயகத்திற்க்கு ஏற்ப்புடையதல்ல - என்றார். (ஐ)

# தமிழக முதல்வர் ஸ்டாலினுடன் பா. ஜ. கட்சியினர் சந்திப்பு!

*சென்னை, நவ. 16*

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினை பா. ஜ. க. நிர்வாகிகள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் நேற்று நேரில் சந்தித்துப் பேசினர்.

சென்னையில் உள்ள தலைமை செயலகத்தில் முன்னாள் மத்திய அமைச்சரும் பா. ஜ. க. நிர்வாகியுமான பொன். ராதாகிருஷ்ணன், பாஜக எம்.எல்.ஏ. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் முதல்வர் ஸ்டாலினை சந்தித்துப் பேசினர்.

இந்த சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களை சந்தித்த பா. ஜ. கவினர், வழிபாட்டுத் தலங்களில் உள்ள பிரச்னைகள் குறித்தும், தொகுதியில் உள்ள பிரச்னைகள் குறித்தும் முதல்வரிடம் ஆலோசித்தனர் என்று கூறினர்.

(ஐ)

# காணிகளை உறுதிப்படுத்துவோருக்கு ஆளுநர் அலுவலகம் உதவியளிக்கும்!

## வடக்கு ஆளுநர் ஜீவன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.16

**யாழ்ப்பாணத்தில் 2,749 பேரின் தனியார் காணிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் எஞ்சியோர் தமது காணிகளை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உதவுவதற்கு ஆளுநர் செயலகம் தயாராக இருப்பதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**

வட மாகாணத்தில் தனியார் காணிகள் தொடர்பில் அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் நில அமைச்சகம், நில ஆணையாளர் பொது அலுவலகம், நில அளவைத் துறை ஆகியவற்றின் கூட்டங்கள் மற்றும் நிலுவையில் உள்ள தற்போதைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அனைத்து துறையினரையும் உள்ளடக்கி ஆராயப்படும்.

கொழும்பு காணி ஆணையாளர் அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி அதிகாரிகளால் அனைத்து நில உரிமை கோருபவர்களையும் சந்தித்து, சம்பந்தப்பட்ட துறைகளுடன் தனிப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும்.

தனியார் நில உரிமைகோரல்கள் அனைத்து மாவட்ட செயலாளர்கள் மாகாண நில ஆணையர், உரிமை தீர்வு பிரிவு, ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து உரிமை கோரப்பட்ட அனைத்து தனியார் நில உரிமையாளர்களின் விவரங்களையும் இவ்வருட இறுதிக்குள் மாவட்ட செயலாளர் அவர்கள் முடிவுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

மாவட்ட செயலாளர்களால் நில உரிமைகோரல்கள் 4, 004 பதிவுகள் சரிபார்க்கப்பட்ட நிலையில் 2,749 உரிமை உறுதிசெய்யப்பட்டது. மேலும் வனவளத்துறையினரிடம் காணப்படும் நிலங்களை உரிய முறையில் அடையாளம் கண்டு பொதுப் பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றும் கூறினார்.

(ஐ)

# வீதியில் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அபகரிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 16

சைக்கிளில் சென்ற பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சங்கிலியை அபகரித்து சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று கல்வியங்காடு, ஜி. பி. எஸ். வீதியில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வழிப்பறி தொடர்பான சி. சி. ரீ. வி. காணொலி பதிவு ஒன்றும் தமக்கு கிடைத்துள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் வழமைபோன்று ஆலயத்துக்கு சென்றுவிட்டு திரும்பியபோதே மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் ஒரு பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்து சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 200 வருட மரம் அடிசாய்ந்தது!



யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் 200 வருடங்கள் பழமை வாய்ந்த மலைவேம்பு அடிசாய்ந்து வீதியின் குறுக்கே விழுந்தது. இதனால், யாழ்ப்பாணம் - கச்சேரி வீதியூடான போக்குவரத்து நேற்று முற்பகல்வரை தடைப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதால் - வீதியில் எவரும் பயணிக்காததால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. மரம் சாய்ந்ததில் அருகிலிருந்த வீட்டின் மதில் பகுதியளவில் சேதமடைந்தது. (ஐ-03)

# இளவாலையில் கசிப்புடன் இரு பெண்கள் கைதாகினர்!

யாழ்ப்பாணம், நவ. 16

21 லீற்றர் கசிப்பை கொண்டு சென்ற இரு பெண்களை இளவாலை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட அதிரடி சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, 27 வயது பெண்ணிடம் 16 லீற்றர் கசிப்பும், 42 வயது பெண்ணிடம் 5 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதானவர்கள் இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# வீடுடைத்து பணம், நகை களவாடியவர் கைதானார்!

யாழ்ப்பாணம், நவ. 16

கோண்டாவிலில் வீடொன்றை உடைத்து நகை, பணம் மற்றும் கைபேசி திருடிய குற்றச்சாட்டில் கோப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்துப் புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த நகைகள் மற்றும் பணம் உள்ளிட்டவற்றை திருடி சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் நடத்திய விசாரணையில் இந்தத் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபர் உரும்பிராய் பகுதியில் நடமாடுகிறார் என்று தகவல் கிடைத்தது. இதையடுத்து, பொலிஸார் அங்கு சென்று சந்தேகநபரை கைது செய்தனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் சந்தேகநபர் வவுனியாவை சேர்ந்தவர் என்பது தெரிய வந்தது. அவரிடம் இருந்து இரண்டரை பவுண் தங்க சங்கிலி, 20 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான கைபேசி என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ- 03)

# மன்னார் பேருந்து நிலையத்தில் விசேட மருத்துவ பரிசோதனை!



மன்னார், நவ. 16

மன்னார் மத்திய பேருந்து நிலையத்தில் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் நீரிழிவு உள்ளிட்ட தொற்றா நோய்களை கண்டறிவதற்கான பரிசோதனை இடம்பெற்றது.

மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் பிராந்திய தொற்றா நோய்கள் தடுப்பு பிரிவினர் இணைந்து குறித்த பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன் போது பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு தமக்கு தேவையான பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதனின் பணிப்புரைக்கு அமைவாக மருத்துவர்கள் சுகாதார பிரிவினர் குறித்த பரிசோதனைகள் முன்னெடுத்தனர்.

(ஐ)

# மன்னார் பாடசாலையில் 100 மரங்கள் நாட்டப்பட்டன!



மன்னார், நவ. 16

‘மரம் நாட்டுவோம் எதிர்கால சந்ததியைப் பாதுகாப்போம்’ எனும் தொனிப் பொருளில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. சார்ள்ஸ் நிர்மலநாதனின் எண்ணக்கருவில் வன்னி மண் அறக்கட்டளையின் நெறிப்படுத்தலில் மர நடுகை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வு மன்னார் பரிகாரிகண்டல் அ.த.க பாடசாலையில் அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில், ஆசிரியர்கள், மாணவர்கள், மன்னார் மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரிகள், வன்னிமண் அறக்கட்டளை உறுப்பினர்கள்,பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது பாடசாலை வளாகத்தில் நூறுக்கும் மேற்பட்ட மரக் கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன. (ஐ)

படைக்கு காணிகள் சுவீகரிக்க கூட்டம்

# ஆளுநர் அலுவலகம் முன்பாக த. தே. ம. முன்னணி போராட்டம்!



யாழ்ப்பாணம், நவ. 16

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், முப்படைகளின் தேவைக்கு மக்களின் காணிகளை சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தை அடுத்து வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெறவிருந்த பிரதேச செயலாளர்களின் கூட்டம் தடைப்பட்டது.**

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக இந்தப் போராட்டம் நடைபெற்றது.

வடக்கில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ள காணிகளை சுவீகரிப்பதற்காக நில அளவை செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. மக்கள் போராட்டங்கள் காரணமாக இவை தடைப்பட்டன. இந் நிலையில், வடக்கு ஆளுநர் இந்தக் காணிகளை வேறு வழிகளில் சுவீகரிப்பது தொடர்பில் கலந்துரையாட பிரதேச செயலர்களை அழைத்திருந்தார்.

இந்தக் கூட்டம் நேற்று மதியம் ஆளுநரின் அலுவலகத்தில் நடைபெறவிருந்தது. இதனைத் தடுக்கும் முகமாகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள் “எமது நிலம் எமக்கு வேண்டும்”, “தமிழ் அதிகாரிகளே ஆளுநரின் பதவிக்கு துணைபோகாதீர்கள்”, “தமிழர்களின் நிலங்களே அபகரிக்காதே”, “ஐ.எம்.எவ். உதவி பெறுவதற்கு நாடகமே”, “இனப்படுகொலை இராணுவமே தமிழர்களின் நிலங்களை அபகரிக்காதே”, “ரணில் - ராஜபக்ஷ அரசே கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை நிறுத்து”, “வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்”, என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்திய வண்ணம், கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)



# மல்லாவி ஆதார மருத்துவமனைக்கு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள்!

முல்லைத்தீவு, நவ. 16

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் கனடா செந்தில்குமரன் நிவாரண நிதியத்தால் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் நன்மை கருதி விடுக்கபட்ட கோரிக்கைக்கு அமைவாக சுமார் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 500இற்கும் மேற்பட்ட சிறுநீரக நோயாளிகள் பயனடையக் கூடிய வகையில் இந்த இரு இயந்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்கு துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் உள்ள சிறுநீரக நோயாளர்கள் வாரத்தில் இரண்டு தடவைகள் இரத்த சுத்திகரிப்புக்காக பெரும் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் கிளிநொச்சி, வவுனியா, மன்னர் பொது வைத்தியசாலை ஆகியவற்றுக்கு சென்று சிகிச்சை பெற்று வருகின்ற நிலைமை காணப்படுகிறது இந்நிலையிலேயே இந்த இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில், மல்லாவி பிரதேச பொறுப்பு வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் ஸ்தாபகர், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பா.ம. உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா, மருத்துவ அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள
யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும்
அனைத்து விளம்பரங்களும்
யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# 2023 வரவு - செலவுத் திட்டம் மக்கள்மீது சுமையேற்றுகிறது

சுரேஷ் பிறேமசந்திரன்

யாழ்ப்பாணம், நவ. 16

ஜனாதிபதியால் நேற்று முன்தினம் அன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் மக்களின் மீது மேலும் சுமைகளை ஏற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏற்கனவே பொருளாதார ரீதியில் பாதிப்படைந்த மக்களின் வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிப்பதையே இலக்காகக் கொண்டுள்ளது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கொள்ளையடித்தவர்களிடமிருந்து அதனை மீட்டெடுப்பதற்கான வழிமுறைகளையும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் காணமுடியவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், 2023ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டமானது, எந்தவிதமான ஆரவாரமுமின்றி, பாராளுமன்றத்தின் ஆதரவுக் குரல்களுமின்றி ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மொத்த வருமானமாக 3,415பில்லியன் ரூபாய் என்றும் மொத்த செலவாக 5,819 பில்லியன் ரூபாய் என்றும் எதிபார்க்கப்படுகிறது. அதன்படி துண்டுவிழும் தொகையாக 2404 பில்லியன் ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளுக்கு இணங்கவே இந்த வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அதில் உண்மையும் உள்ளது. அரச உத்தியோகத்தர்களுக்கோ தனியார்துறை ஊழியர்களுக்கோ எவ்வித ஊதிய உயர்வுகளுமில்லாமல் இருக்கின்ற அதேசமயம், பொருட்களின் விலை பன்மடங்கு அதிகரித்து மிக உச்சத்தில் இருக்கின்றது.

முப்படைகளின் பாதுகாப்பு செலவீனமாக இலங்கையின் மொத்த செலவீனத்தில் 11.2 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, 130கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவில் அதுவும் அண்டை நாடுகளுடன் நீண்ட எல்லைகளையும் எல்லைத் தகராறுகளையும் கொண்ட நாடே பாதுகாப்பிற்கு 9 வீதத் தொகையையே ஒதுக்கியுள்ளது.

இரண்டு கோடியே இரண்டரை இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இலங்கைக்கு பாதுகாப்பிற்காக 41,000 கோடி ரூபாய் செலவு அவசியம்தானா? இவ்வளவு பெருந்தொகை படையினர் தேவைதானா? பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வளவு முகாம்கள் தேவைதானா? இலங்கை, எந்த நாட்டிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இவ்வளவு பெரிய படையை வைத்துக்கொண்டு அதற்காக இவ்வளவு பெரிய தொகையை செலவு செய்கின்றது? வங்குரோத்து அடைந்த ஒரு நாட்டுக்கு இவ்வளவு பெரிய இராணுவ அமைப்புமுறை அவசியம்தானா? - என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஐ)

# 4 இலட்சம் கிலோ பால்மா துறைமுகத்தில் தேக்கம்!

## பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

கொழும்பு, நவ. 16

**4 இலட்சம் கிலோ பால்மா அடங்கிய 17 கொள்கலன்கள் கடந்த 25 நாட்களாக கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன என்று பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி லக்ஷ்மன் விஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஆவணங்கள் மற்றும் கடன் பத்திரங்கள் தாமதமானதால் 15 கொள்கலன்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொள்கலன்களை விடுவிக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நிர்வாக திணைக்களத்தின் அனுமதி மறுக்கப்பட்டதன் காரணமாகவே அவை தேங்கியுள்ளன என்றும், அவற்றுக்கு தாமதக் கட்டணமாக 40 இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டியுள்ளதால் பால்மா வின் விலையை அதிகரிக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

“வெளிநாட்டில் இருந்து எங்களுக்கு பால்மா ஏற்றுமதி செய்த நிறுவனங்கள் இந்தப் பால்மாவை வியட்நாம் மற்றும் இந்தோனேசியாவுக்கு மீண்டும் அனுப்ப சொல்கிறார்கள். அப்போது என்ன நடக்கும், நாட்டில் பால்மா பற்றாக்குறை ஏற்படும்.

கொள்கலன்களை விடுவிப்பதற்கு அமைச்சு அனுமதி வழங்கியுள்ள போதிலும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர், பால்மா கொள்கலன்களை விடுவிக்க மறுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் உப்புல்மலி பிரேமதிலக்கவிடம் வினவியபோது, திணைக்களத்தில் வினைத்திறனற்ற நிலைமை இல்லை எனவும் கட்டுப்பாட்டாளர் என்ற வகையில் தாம் எவ்வித ஆவணங்களையும் மறைக்கவில்லை என்றார்.

மேலும், பால்மா பிரச்னை குறித்து சரியாகத் தெரியவில்லை எனவும் பொதுச் சட்டத்துக்கு மாறாக இறக்குமதி செய்யப்பட்டால் அதனை எக்காரணம் கொண்டும் விடுவிக்க மாட்டோம் என்றும் தெரிவித்தார். (ஐ)



# உலக உணவு தினத்தில் கவனவீர்ப்பு போராட்டம்!

வவுனியா, நவ. 16

வவுனியாவில் மக்கள் திட்டம் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் உலக உணவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

“பட்டினி மந்த போசாக்கு என்பது திட்டமிட்டு குற்றமாகும்” எனும் தொனிப்பொருளில் வட மாகாண மக்கள் திட்டம் ஒன்றியத்தின் இணைப்பாளர் ந.தேவகிருஷ்ணன் தலைமையில் தனியார் விருந்தினர் மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், மன்னார், முல்லைத்தீவு, மணலாறு, வவுனியா போன்ற பிரதேசங்களில் செயல்படும் அமைப்பாளர்களின் ஒத்துழைப்பில் மக்களுக்கு உணவளிக்கும் முறையில் மாற்றத்துக்காக ஒன்றிணைவோம் எனும் கருப்பொருளை மையப்படுத்தி துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் மண்டபத்திற்கு வெளியே தமது பிரகடனத்தை வலியுறுத்தி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றும் நடைபெற்றது. இதில், மூவின மக்களும் பங்கேற்றனர். (ஐ)

# பீடி இலைகளை கடத்த முயன்ற இந்திய, இலங்கை மீனவர் கைது!

இராமேஸ்வரம், நவ. 16

இந்தியாவிலிருந்து உலர் பீடி புகையிலை இலைகளை கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் 8 இந்திய பிரஜைகளும் 6 இலங்கை பிரஜைகளும் இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடி கடற்பரப்பில் இவர்கள் கைதாகினர். இந்திய கடலோர காவல்படையின் வஜ்ரா கப்பல் ரோந்து பணியின் போது 8 மீனவர்களுடன் இரண்டு இந்திய மீன்பிடி படகுகளையும் 6 மீனவர்களுடன் இரண்டு இலங்கை மீன்பிடி படகுகளையும் கைப்பற்றியது. (ஐ)

# எந்த செல்வாக்குக்கும் அடிபணியாமல் தேர்தலை உரியநேரத்தில் அறிவிப்போம்

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் உறுதி

கொழும்பு, நவ. 16

எந்தவொரு செல்வாக்குக்கும் அடிபணியாமல் குறித்த நேரத்தில் உள்ளூராட்சி சபை தேர்தலை அறிவிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா நேற்று உறுதிமொழி வழங்கியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பாராளுமன்றத்தில் உள்ள 16 கட்சிகள் மற்றும் குழுக்களின் தலைவர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சென்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்களை சந்தித்த போதே புஞ்சிஹேவா இந்த உறுதிமொழியை வழங்கினார்.



தேர்தலை பிற்போடுமாறு ஜனாதிபதி அல்லது அரசாங்கத்தின் அழுத்தத்துக்கு ஆளாக வேண்டாம் என தலைவர்கள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா இது தொடர்பான உறுதிமொழியை வழங்கினார்.

கலந்துரையாடலின் முடிவில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு எழுத்து மூலமான கோரிக்கை அடங்கிய கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் கையளித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டபடி தேர்தலை நடத்துவதற்கு பாராளுமன்றத்தில் இருந்து இடையூறு ஏற்படாத வகையில் பாடுபடுவோம் என இன்று கூடிய கட்சித் தலைவர்கள் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவரிடம் வாக்குறுதியும் அளித்துள்ளனர். (ஐ)

# இறைச்சிக்காக திருடப்பட்ட மூன்று பசு மாடுகள் மீட்பு!



வடமராட்சி, நவ. 16

இறைச்சிக்கு வெட்டுவதற்காகத் திருடப்பட்ட மூன்று பசு மாடுகளை பருத்தித்துறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பருத்தித்துறை வல்லிபுர குறிச்சி பிரதேசத்தில் இறைச்சியாக்குவதற்காக திருடப்பட்டிருந்த 3 மாடுகளே பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையிலான பொலிஸாரால் மீட்கப்பட்டன.

நேற்று முன்தினம் அதிகாலை மீட்கப்பட்ட இந்த மூன்று பசு மாடுகளும் பருத்தித்துறை நீதிமன்றம் ஊடாக உரிமையாளர்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாட்டை திருடியவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அரசமைப்பு சபை உறுப்பினராக காசிமை சஜித் தரப்பு நியமிக்கும்?

கொழும்பு, நவ. 16

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் அரசமைப்பு சபைக்கு நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசமைப்பு பேரவைக்கு காசிமை நியமிக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, 10 உறுப்பினர்களை கொண்ட அரசமைப்பு பேரவை உருவாக்கப்பட்டது. பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு போன்ற சுயாதீன ஆணைக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் பொறுப்பு அரசமைப்பு சபைக்கு உரியதாகும்.



சபையின் தலைவராக சபாநாயகர் பணியாற்றுகிறார். மேலும் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் 10 உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புச் சபையின் அதிகாரபூர்வ உறுப்பினர்களாக உள்ளனர்.

அரசமைப்பு பேரவைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வேட்பாளராக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை நியமித்துள்ளார். (ஐ)

ஈழநாடு



# உரிய காலத்தில் தேர்தல்களை நடத்துவதே அரசியல் உறுதிப்பாட்டுக்கான ஜனநாயகப் பாதை

## பாதுகாப்பை மையமாகக் கொண்ட அரசாங்கத்தின் அணுகுமுறை நீண்டகால நோக்கில் எதிர்விளைவுகளைக் கொண்டுவரும்



**கலாநிதி ஜெகான் பெரேரா**

ஏனைய சகல துறைகளுக்கும் செலவினங்கள் குறைக்கப்படுகின்ற ஒரு நேரத்தில் பாதுகாப்புத்துறை பட்ஜெட்டுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றமை அதிகாரத்தை இறுகப்பிடித்து அரசியல் உறுதிப் பாட்டு தோற்றத்தை காண்பிப்பதற்கு அரசாங்கம் பாதுகாப்பு படைகள் மீது எந்தளவுக்கு தங்கியிருக்கிறது என்பதை வெளிக்காட்டுகிறது. மோசமான நிலைமை இனிமேல் தான் வரப்போகிறது என்ற அரசாங்கத்தின் பயத்தையும் இது பிரதிபலிக்கிறது. முன்னென்றும் இல்லாத பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைவில் நாடு விடுபடும் என்று நம்பிக்கொண்டிருக்கும் மக்க ளைப் பொறுத்தவரை இது தீமைக்கான அறிகுறியேயாகும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவிக்கு வந்ததமை தொடர்பில் எழுந்த நியாயப்பாட்டு கேள்விகளுக்கு அப்பால் அவரின் வருகை அவருக்கு சர்வதேச முறைமைகளுடன் இருக்கும் பரிச்சயத்தின் ஊடாக சர்வதேச ஆதரவைப் பெற்று அரசியல் உறுதிப்பாட்டைக் கொண்டுவருவதற்கு உதவும் என்ற எதிர்பார்ப்புடன் வரவேற்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்பு இன்னமும் நிறைவேறவில்லை. நாட்டுக்கு இறுதியாக கிடைத்த பெருமளவு உதவி இந்தியாவிடம் இருந்தே வந்தது. விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு முன்னர்தான் இது நடந்தது.

நாட்டுக்கு தேவைப்படுகின்ற கடனுதவியை சர்வதேச நாணய நிதியம் வழங்கும் என்றே தற்போது நம்பிக்கை வைக்கப்படுகிறது. அவ்வாறு கிடைக்கக் கூடிய கடனுதவி இவ்வருடம் மார்ச் மாதம் கடன்தீர்க்க வக்கில்லாத நிலை பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் இலங்கையுடன் மீண்டும் அலுவல்களை ஆரம்பிக்க கடன்வழங்கும் நிறுவனங்களுக்கும் ஒரு பச்சை விளக்காக அமையும். சர்வதேச நாணய நிதியத்தினால் நிர் ணயிக்கப்பட்ட பொருளாதார இலக்குகளை பிரதிபலிப்பதாக பட்ஜெட் அமையும் என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க வெளிப்படையாகவே கூறினார்.

இதுவரையில் இறுக்கமான இரகசியமாக இருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகளை பகிரங்கப்படுத்துவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார். அந்த யோசனைகள் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரம் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து கடுமையான சந்தேகங்கள் பொதுவெளியில் கிளம்பியிருந்தன. சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகள் பொதுமக்களிடம் வேண்டி நிற்கும் தியாகம் தொடர்பில் மூளக் கூடிய கோபம் ஜனாதிபதிக்கு எதிராக திருப்பி விடப்படக்கூடும். தங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் நாட்டு மக்களை சிறப்பாக பாதுகாக்கமுடியும் என்று அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியிலும் உள்ள (ஆட்சிக்கு வரும் ஆர்வம் கொண்ட ) தலைவர்கள் கூறிவருகிறார்கள்.

இத்தகைய பில்புலத்தில், பொருளாதார சீர்திருத்தங்கள் மீதான எதிர்ப்பை மக்கள் தேர்தல்களின் மூலமாகவோ அல்லது ஆர்ப்பாட்டங்கள் மூலமாகவோ காட்டுவதை ஜனாதிபதியும் அவரது குழுவினரும் விரும்பமாட்டார்கள். உள்ளூராட்சி சபைகளின் வட்டாரங்களின் எல்லைகளை வரையறை செய்வதற்கும் உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கைய அரைவாசியாக குறைப்பதற்கும் தேசிய எல்லை நிர்ணய குழு திடீரென்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு செலவுகளை குறைக்கும் நடவடிக்கையாக இதை அரசாங்கம் கூறுகிறது. இது அடுத்த வருடம் மார்ச் மாதம் நடத்தப்படவேண்டியிருக்கும் உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதற்கு வழிவகுக்கக்கூடிய தந்திரோபாயமாகவும் நோக்கப்படலாம். அவ்வாறு ஒத்திவைக்கப்பட்டால் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கக் கூடிய வாய்ப்பை அது இல்லாமல் செய் யும். சுகாதாரத்துறைக்கும் கல்வித்து றைக்கும் ஒதுக்கப்பட்ட நிதியையும் விட கூடுதலானதாக இருக்கும் பாதுகாப்பு பட்ஜெட் அரசாங்கத்துக்கு எதிரான எந்த கிளர்ச்சியையும் ஒடுக்குவதற்கு பாதுகாப்பு படைகள் ஊக்கம் பெறுவதை உறுதிசெய்யும் எனலாம்.

**நியாயப்பாட்டு நெருக்கடி**

இவ்வருடம் பொருளாதாரம் வீழ்ச்சியடையத் தொடங்கி மக்கள் வீதிகளில் இறங்கி போராடத் தொடங்கிய நேரத்தில் இருந்து அரசாங்கம் அதன் நியாயப்பாடு தொடர்பிலான நெருக்கடியொன்றை எதிர்நோக்கி வருகின்றது. அந்த நெருக்கடியை அரசாங்கத்தினால் அலட்சியம் செய்ய இயலாது. இவ்வருடம் மே மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையின் பதவி விலகல் அரசாங்கத்தை பெரும் பீதிக்குள்ளாக்கி பாதுகாப்பற்ற ஒரு உணர்வைக் கொடுத்திருக்கிறது. இரு மாணவர் தலைவர்களை விடுதலை செய்யக்கோரி பதாதைகளை ஏந்திய வண்ணம் வீதிப்போராட்டத்தில் ஈடுபட்ட இரு பெண்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட சம் பவம் அரசாங்கத்தின் இந்த பாதுகாப்பின்மையின் ஒரு அறிகுறியாகும்.

இவ்விரு பெண்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருந்திருக்கிறது. பெரும் எண்ணிக்கையான பொலிசார் பெண்களை சுற்றிவளைத்து வாகனத்தில் பலவந்தமாக ஏற்றியதை காணக்கூடியதாக இருந்தது. இந்த களேபரத்தில் பொலிஸ் அதிகாரிகள் பெண் பொலிசாரை கழுத்தில் பிடித்து கொடூரமாக நடத்தியதை சமூக ஊடகங்களில் வெளியான பதிவுகளில் காணமுடிந்தது. அந்த பொலிஸ் அதிகாரிகள் ஏன் இவ்வாறு நடந்து கொண்டார்கள்என்பது பார்த்துக்கொண்டு நின்றவர்களுக்கும் தெரியவில்லை.

அரசாங்கம் அதன் நடவடிக்கைகளை மற்றவர்கள் எவ்வாறு நோக்குவார்கள் என்பதைப் பற்றி எந்த யோசனையும் இல்லாமல் பாதுகாப்பு அக்கறைகளில் மூழ்கியிருக்கிறது. இது நாட்டையும் அரசாங்கத்தையும் பொறுத்தவரை துரதிர்ஷ்டமானது. இரு மாணவர் தலைவர்களை எந்த குற்றச்சாட்டும் சுமத்தாமல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மூன்று மாதங்களுக்கும் கூடுலாக தடுத்து வைத்திருக்கும் அரசாங்கத்தின் செயல் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களை மாத்திரமல்ல, நியாயமாக சிந்திக்கக் கூடிய எவரையும் கடும் சீற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

அரசாங்கத்தின் இந்த செயல் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பைக் கொண்டுவரக்கூடியதாகும். இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு பெரும் பயனுடையதாக இருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை நீடிப்பதா இல்லையா என்பது அடுத்த வருடம் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியம் அந்த சலுகையை நீடிப்பது இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரத்தை பொறுத்ததேயாகும். இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களும் தற்போது தொடருகின்ற மனித உரிமை மீறல்க ளும் ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றத்திலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச அரங்குகளிலும் விவாதத்துக்கு எடுக்கப்படுகின்றன. இது நாட்டுக்கு பெரும் பாதிப்பைக் கொண்டுவரும்.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நிலைவரம் குறித்து கடந்த வாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மக்கள் சபையில் நடைபெற்ற விவாதத்தின்போது நாட்டில் தொடருகின்ற மனித உரிமை மீறல்கள் குறித்து பல பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினார்கள். இலங்கை மீது சில வகையான தடை களை கொண்டுவர வேண்டும் என்று கோரிய அவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கை விவகாரத்தை பாரப்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைக்கான கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் இராணுவச் செலவினங்களைக் குறைக்கவேண்டும் என்றும் இலங்கை அரசாங்கத்திடம் அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். மனித உரிமை மீறல்களுக்கு எதிரான ஒரு புதிய தலைமுறை தடைகள் திட்ட மான உலகளாவிய மக்னிட்ஸ்கி சட்டத்தை இலங்கைக்கு பிரயோகிக்க வேண்டும் என்று ஒரு உறுப்பினர் யோசனை முன்வைத்தார். இந்த சட்டம் தனிப்பட்ட நாடுகளை இலக்குவைத்து விதிக்கப்படுகின்ற பாரம்பரிய தடைகளுக்கு மாறாக, உலகம் பூராவும் குற்றமிழைத்தவர்களுக்கு -- அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் -- எளிதாக பிரயோகிக்கக்கூடியதாகும்.

**இராணுவ வரையறை**

பாதுகாப்பை மையமாகக் கொண்ட அரசாங்கத்தின் அணுகுமுறை நீண்டகால நோக்கில் எதிர்விளைவுகளைக் கொண்டு வரப்போகிறது என்பது கவலை தருகிறது. அந்த அணுகுமுறையினால் நெருக்கடியின் அறிகுறிகளை தற்போதைக்கு மாத்திரம் அடக்கிவைக்கமுடியும். மனிதாபிமான விவகாரங்கள் ஒருங்கிணைப்புக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் ' இலங்கை் பல்பரிமாண நெருக்கடி -- மனிதாபிமான தேவைகளும் முன்னுரிமைகளும் -- ஜூன் -- டிசம்பர் 2022 ' என்ற தலைப்பில் அறிக்கையொன்று தற்போது வெளியிடப்பட்டிருக்கிறது.

ஒரு கோடி 35 இலட்சம் மக்கள் -- சனத்தொகையில் 61.1 சதவீத மானோர் -- உணவு தட்டுப்பாடு காரணமாக சமாளிப்பு யுக்திகளை கையாளுவதாகவும் 47.7 சதவீதமான குடும்பங்கள் வாழ்வாதாரத்தை சமாளிக்கும் யுக்திகளை கையாளுவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

8 நவம்பர் 2022 வெளியிடப்பட்ட அந்த அறிக்கை ,'சுமார் 53 இலட்சம் மக்கள் அல்லது சனத்தொகையில் 24 சதவீதமானோர் தங்களது உணவு வேளைகளை குறைத்திருக்கிறார்கள். சனத்தொகையில் அதே சதவீதத்தினரில் வயதுவந்தவர்கள் பிள்ளைகள் சாப்பிட வேண்டும் என்பதற்காக தங்களது உணவைக் குறைக்கின்றார்கள். குடும்பத்தில் பெண்களே இறுதியாக சாப்பிடுகிறார்கள். 2021 இறுதிப்பகுதியுடன் ஒப்பிடும் போது ஏற்றுக்கொள்ளமுடியாத உணவு வகைகளை சாப்பிடும் குடும்பங்களின் விகிதம் பத்து மடங்கு அதிகரித்திருக்கிறது." என்று கூறுகிறது. உண்மையிலேயே மக்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது.

தேர்தல்கள் பின்போடப்பட்டு தங்களது நம்பிக்கைக்குரியவர்களை மக்கள் தெரிவுசெய்யமுடியாமல் போகும் பட்சத்தில் தாங்கள் அனுபவிக்கும் இடர்பாடுகளுக்கு எதிராக மக்கள் வீதியால் இறங்கி போராடவே செய்வர். விலைவாசி உயர்ந்து, எரிபொருட்களும் பசளை வகைகளும் கிடைக்காத நிலையில், தினமும் அரைவாசி நேரம் மின்வெட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டபோது மக்கள் கிளர்ந்தெழுந்து அறகலய போராட்டம் மூண்டது. அதேபோன்ற விரகத்தியான ஒரு கட் டம் மீண்டும் தோன்றி மக்கள் கிளர்ந்தெ ழுவார்களேயானால், பாதுகாப்பு படைகளினால் அதை அடக்க இயலும் என்று எதிர்பார்க்கமுடியாது.

நியாயபூர்வமான போராட்டங் களை ஒடுக்குவதை விடுத்து மக்களின் தேவைகளை நிறைவேற்ற அரசாங்கம் கிடைப்பதற்கு அரிதான அதன் வளங்களை ஒதுக்குவதே தற்போதைய தருணத்தின் பிரதான தேவையாகும். மறுபுறத்தில், அரசாங்கம் மக்களை அடக்கி எதிர்காலத்தில் கிளர்ச்சிகள் மூளாமல் இருப்பதை தடுப்பதற்கு பாதுகாப்பு படைகளில் தங்கியிருக்கிறது என்றே தோன்றுகிறது.

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய உரையொன்றில் ஜனாதிபதி விக்கிரமசிங்க ஆயுதப்படைகள் மீது அரசாங்கம் ஏன் இந்தளவு கூடுதல் கவனத்தைக் குவிக்கிறது ? 2030 பாதுகாப்பில் ஏன் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது? என்று கேள்விகள் கிளம்பலாம் என்பதை ஒத்துக்கொண்டார். 'நாம் பிறந்தபோது இந்து சமுத்திரத்தில் எந்த தகராறும் இருக்கவில்லை. ஒரு கட்டத்தில் இந்து சமுத்திரம் ஒருவருக்கும் தேவைப்படவில்லை. இன்று அவ்வாறில்லை. நாம் தப்பிப்பிழைக்கவேண்டும் என்றால், ஆற்றல்களை, பாதுகாப்பு ஆற்றல்களை, மூலோபாய ஆற்றல்களை, எல்லாவற்றையும் பயன்படுத்தவேண்டியிருக்கும்" என்று ஜனாதிபதி தனதுரையில் குறிப்பிட்டதாக செய்திகள் வெளியாகின.

கடல் போக்குவரத்து சுதந்திரம் இல்லையென்றால் நாடு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழில்துறையைக் கொண்டிருக்க முடியாது என்று ஜனாதிபதி தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. இந்த பதில் நம்பும்படியாக இல்லை. ஏனென்றால், பிரிட்டிஷ் அல்லது பிரெஞ்சு இராணுவங்களை விடவும் கூடுதல் எண்ணிக்கையில் இருக்கும் இராணுவத்தை பேணுவதற்கு பாதுகாப்பு பட்ஜெட்டின் பெரும்பகுதி போகிறது. மக்களை தவறாக வழிநடத்திய இந்த வகையான கூற்றுக்களும் நியாயப்படுத்தல்களுமே சுதந்திரம் பெற்று 74 வருடங்களுக்கு பிறகு நாட்டை இன்றைய நிலைக்கு கொண்டுவந்தன. உரிய நேரத்தில் தேர்தல்களை நடத்தி அதன் மூலம் தெரிவாகின்ற அரசியல் பிரதிநிதிகளுடன் அடுத்து முன்னெடுக்க வேண்டிய திட்டங்கள் குறித்து பேச்சு நடத்துவதே பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான நிலைபேறான அரசியல் உறுதிப்பாட்டை அடைவதற்கான ஜனநாயக பாதையாகும்.

## இலங்கையின் பொருளாதார நோயை சமாளிக்கும் ரணில் அரசபொருளியல்



அ. வரதராஜா பெருமாள்

பகுதி 2

# மக்களை தாமாகவே மூச்சடக்கி வாழ நாசூக்காக பழக்கி விட்டார்!

5. இருப்பதையும் கிடைப்பதையும் வைத்துக் கொண்டு உயிர் வாழ்வதைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என பரந்துபட்ட பொதுமக்கள் அவர்களா கவே இதுதான் விதியென ஏற்றுக் கொண்டு மூச்சுக் காட்டாமல் சீவிக்கும் நிலைமைக்கு பொது மக்களை கொண்டு போய் நிறுத்தியுள்ள சாதனையை ஜனாதிபதி ரணிலின் ஆட்சி படிப்படியாக, வெற்றிகரமாக சாதித்துள்ளது.

கொரோனா காரணமாக அடுத் தடுத்து அமுலாக்கப்பட்ட ஊரடங்குகள், போக்குவரத்துத் தடைகள், கொரோனாப் பரவல் தொடர்பாக மக்களிடையே நிலவிய அச்சங்கள் என்பன காரணமாக 2020ம் ஆண்டே மக்கள் அத்தியாவசியமான பொருட்களை மட்டுமே கொள்வனவு செய்வதற்கு ஏற்கனவே தம்மை பழக்கப்படுத்திக் கொண்டனர், மேலும்,


(1) இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஏற்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடுகள் மற்றும் மக்கள் நாடு முழுவதுவும் இரவு பகலென்றில்லாது நாட்கணக்கணக்கில் கியூ வரிசைகளில் கால் கடுக்க நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டமை, பொருட்களின் விலைகள் இரண்டு மடங்கு மூன்று மடங்கு என திடீரென உயர்ந்தமை,

(2) உற்பத்திகளின் வீழ்ச்சிகளின் விளைவாக ஏற்பட்ட வேலையின்மைகளால் மக்களின் வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி,

(3) மக்கள் பொருட்களை வாங்குகின்ற பொருளாதார சக்தி தொடர்பில் மக்களின் வருமானத்தினுடைய மெய்யான பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி என எல்லாம் சேர்ந்து இப்போதைக்கு மிக அத்தியாவசியமான பொருட்களைத் தவிர ஏனையவற்றை வாங்குவதை மக்கள் தாமாகவே குறைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் இதனை இப்போது தமது வாழ்க்கையின் இயல்பான ஒரு விடயமாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

அதன் மூலம், 200க்கு மேற்பட்ட வகையான பல்லாயிரக் கணக்கான பொருட்களுக்கு ஜனாதிபதி தடை விதித்த போதிலும், மிக அத்தியவசியமான பொருட்களின் இறக்குமதியை அரைவாசியாக்கியுள்ள போதிலும், அவற்றின் விளைவாக வேலையில்லாமைகள் அதிகரித்திருக்கின்ற போதிலும், முன்னர் 100 ரூபாவுக்கு வாங்கிய பொருட்களை இப்போது 250 அல்லது 300 ரூபா கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ள போதிலும், இதனால் அரசாங்கத்தைக் குறித்து பரந்துபட்ட மக்கள் மத்தியில் உள்ளூர ஆத்திரமும் வெறுப்பும், விரக்தியும் நிலவுகிற போதிலும், இவையெதுவும் அரசுக்கெதிரான எழுச்சியாக மாறி விடாத ஒரு நிலைமையைப் பராமரிப்பதில் ஜனாதிபதி ரணில் ஒரு சாதனையை நிலை நாட்டியுள்ளார் - "கிடைத்தால் முயல் போனால் எறிந்த கற்கள் தானே"

6. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்த கடனுதவி கிடைப்பது இந்த ஆண்டுக்குள் சாத்தியமாகாது என ஏற்கனவே நாடுகளின் பொருளாதாரம் தெரிந்தவர்கள் கூறி விட்டார்கள். ஜனாதிபதி அவர்கள் அதில் மிகுந்த அனுபவம் பெற்றவர். அவருக்கும் நிச்சயம் தெரிந்திருக்கும். சர்வதேச நாணய நிதியத்தை நாடாதது மிகவும் பிழையானது என கோத்தாபய ஜனாதிபதியாக இருந்த போது குற்றம் சாட்டியோர் பலர். இந்தியா, யப்பான் மற்றும் மேலைத் தேச நாடுகளும், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியனவும் தாம் தொடர்ந்து இலங்கைக்கு



உதவி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் முதலில் சர்வ தேச நாணய நிதியத்திடம் இருந்து உதவியைப் பெற வேண்டும் என வலியுறுத்தின. ரணில் அவர்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் அடிக்கடி கடன் வாங்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கிற நவதாராளவாதியே. இப்போது அதனிடம் போகவில்லை எல்லாருமாகச் சேர்ந்து தன்னைப் போக வைத்துவிட்டார்கள் என்பது போல அந்த நிதியத்துடன் ஊடாடுகிறார். கடன் கிடைத்தால் அது அவரது சாதனையாகும், கிடைக்க வில்லையென்றால் அதற்கு அவர் பொறுப்பாளியாக மாட்டார்.

இந்தா கடன் வரப் போகிறது: பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக முடிந்து விட்டன: அடுத்த மாதத்துக்குள் கிடைக்கும்: இந்த வருடத்துக்குள் கிடைக்கும் என காலத்தை மிகக் கெட்டித் தனமாகவே கடத்தி தனது ஆட்சிக் காலத்தை நகர்த்திக் கொண்டிருக்கிறார். சற்றுக் காலம் தாழ்த்தித் தன்னும் அந்த நிதியம் உதவி தந்தாலும் அந்தத் தொகை அரசின் தேவைக்கு "யானைப் பசிக்கு சோளப் பொரி" போட்ட மாதிரியே இருக்கும். ஆனாலும் அவர் உலக நாடுகளிடமிருந்தும், உலக நிறுவனங்களிடமிருந்தும் சளைக்காமல் முயற்சிக்கிறார். நாடுகளெல்லாம் தன்னை அடுத்தடுத்து அழைக்கின்றன என்பது போல நாடு நாடாக தொடர் பயணங்களை மேற் கொள்கிறார். நாட்டின் பொருளாதார நிலைமையை சீர்படுத்த நமது ஜனாதிபதி எவ்வளவு கடுமையாக உழைக்கிறார் என மக்கள் கருதும் வகையாக செயற்பட்டு மக்கள் மத்தியில் ஓர் அநுதாப அலையையும் ஏற்படுத்துகிறார். இது அவருக்கு அடுத்த தேர்தலுக்கு நன்கு பயன்படும்.

### காற்றைக் கையால் பிடித்து போத்தலில் அடைத்து விற்கிறார்

7. இந்த ஆண்டு கிடைத்த வெளிநாட்டு உதவிகளெல்லாம் பெரும் பாலும் கோத்தாபய அவர்கள் ஜனாதிபதியாக இருந்த போது கிடைத்தவையும் அவர் காலத்தில் தரப்படுவதாக உறுதி செய்யப்பட்டவையுமே. ரணில் அவர்கள் ஜனாதிபதி ஆகிய பின்னர் மருந்துக்கும், அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும், உரத்துக்குமென அவ்வப்போது சில நாடுகள் வழங்கும் சிறுசிறு உதவிகளைத் தவிர குறிப்பிடத்தக்க எந்த உதவியும் இன்னமும் எந்தவொரு நாட்டிடமிருந்தோ அல்லது எந்தவொரு சர்வதேச நிறுவனத்திடமிருந்தோ கிடைக்கவில்லை. கோத்தாபய அவர்கள் ஜனாதிபதியாக இருந்த போதே வெளிநாடுகளுக்கான கடன்கள் தொடர்பில் இலங்கை தன்னைத் தானே வங்கிரோத்து நாடு என அறிவித்துக் கொண்டது. ஆனால், வெளிநாடுகளுக்கான மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கடன்களில் இந்த ஆண்டில் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகைக்கான அந்நியச் செலாவணி தொடர்பான சுமையிலிருந்து தப்பித்திருக்கும் வாய்ப்பாக ஜனாதிபதி ரணில் அதனை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். இல்லையென்றால் இவர் 2015க்கும் 2019க்கும் இடையில் ஆட்சியில் இருந்த போது அம்பாந்தோட்டையில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்பையும், கொழும்பில் கடலை நிரப்பி நிலமாக்கியதில் அரைவாசி நிலப்பரப்பையும் சீனாவுக்கு எழுதிக் கொடுத்த மாதிரி இந்நேரம் இவர் இலங்கையில் இன்னும் பல இடங்களை நாடுகளின் கடனுக்குப் பதிலாக எழுதிக் கொடுத்திருப்பார்.

இப்போதைக்கு ஏற்றுமதி வருமானத்துக்கும் இறக்குமதி செலவுக்கும் இடையில் ஏற்படுகின்ற பாதகமான வர்த்தக நிலுவையை எவ்வளவுக்குக் குறைக்க முடியுமோ அவ்வளவுக்கு குறைக்கும் ஒரு காட்சியைப் படமாக்குவது மட்டுமே தன் வேலை என பதட்டமின்றி செயற்படுகிறார்.

### போராட்டங்களில்லாத நாடே முன்னேறுமாம்

8. நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது. அதற்காக அரசாங்கம் மிகவும் கடுமையான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என அமைச்சர்களும், அரச உயர் அதிகாரிகளும் அடிக்கடி கூறி வருகின்றனர்: அதேவேளை எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையையும் மேற்கொள்ளாமலேயே - மேற்கொள்ள நிதி எதுவும் இல்லாமலேயே அவ்வப்போது தங்கள் தங்கள் அமைச்சுக்கு உட்பட்ட விடயங்களில் நாடு முன்னேறிக் கொண்டிருக்கிறது எனவும் அறிக்கை விடுகிறார்கள். அறகலய போன்ற போராட்டங்கள் மற்றும் தொழிற் சங்கங்களின் போராட்டங்கள் நாட்டின் பொருளாதார நிலைமையை மேலும் மோசமாக்கும் எனவும் அதன் விளைவாக ஏற்படும் அரசியல் உறுதியின்மையின் காரணமாக நாடுகளோ சர்வதேச நிறுவனங்களோ இலங்கைக்கு உதவமாட்டா எனவும் பிரச்சாரங்கள் செய்து அதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசமான நிலையை அடைந்து விடுமோ என ஓர் அச்ச மனோநிலையை மக்கள் மத்தியில் வளர்த்து விடுகின்ற கடமை அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை தெரிகிறது. ஏதோ அறகலயக்காரர்களினதும் தொழிற் சங்கங்களினதும் போராட்டங்களால்த்தான் நாடு இன்றைய அளவுக்கு குட்டிச் சுவராகப் போனது என அரச பிரச்சாரங்கள் தீவிரமாக நடக்கின்றன.

உண்மையில் அரசாங்க ஊழியர்களின் சம்பளமெதுவும் பொருட்களின் விலையேற்றத்துக்கு உரிய விதமாக உயர்த்தப்படவில்லை. சம்பளங்களின் மெய்யான பெறுமதி 200 சதவீதத்துக்கு மேல் வீழ்ச்சியடைந்து விட்டது. தனியார் நிறுவனங்களிலுள்ள ஊழியர்களின் நிலைமையும் அதுவே. பெரும் நிறுவனங்கள் அனைத்தும் கொரோனா தொடங்கிய நாள் தொட்டு இன்று வரை முன்னரை விட அதிகமாகவே லாபம் சம்பாதிப்பதை அந்த நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளே குறிப்பிடுகின்றன. ஆனால் அவ்வாறான தனியார் நிறுவனங்கள் ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. அதேவேளை ரணில் அவர்களின் ஆட்சியில் இதுவரை எந்தவொரு போராட்டமும் அரச ஊழியர்கள் பக்கத்திலிருந்து எழவில்லை. அவ்வாறு எதுவும் எழுந்து விடாதபடி ஒரு பயக்கெடுதியான நிலையை அரசாங்கம் தனது அனைத்து யந்திரங்களையும் பயன்படுத்தி பராமரிக்கிறது. தாங்கள் நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து போராட்டங்களை முன்னெடுத்தால் மக்களின் எதிர்ப்பை சம்பாதிக்க நேரிடுமோ என தொழிற் சங்கத் தலைவர்களையும் அச்சமுற ஆக்கிவிட்டது இந்த ஆட்சி.


(பகுதி 3ல் தொடரும்)

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

...........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ...........    ii) 18, 15, 12, ............., ...........

21)

| | | |
|---|---|---|
| 3, | 9, | |
| | 6, | 14, |
| 10, | | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.......................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

.................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

.................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............. | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............. | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............. | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

......................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8
**19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745
**23.** 455
**24.** 1l 100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1
**31.** 2
**32.** 3
**33.** 2
**34.** 3
**35.** 2

---

கல்வி tv CHANNEL-1

**16.11.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**16.11.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## எரிவாயு கசிந்ததால் மீனவருக்கு தீ காயம்!

வாழைச்சேனை, நவ. 16

எரிவாயு கசிவால் தீ காயங்களுக்கு உள்ளான மீனவர் ஒருவர் வாழைச்சேனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆழ்கடலுக்கு இயந்திர படகில் மீன்பிடிக்க சென்ற ஓட்டமாவடி - மீராவோடை பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவரே இவ்வாறு எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் நேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

படகிலிருந்த எரிவாயு சிலிண்டரில் உணவு சமைத்துக் கொண்டிருந்த போது எரிவாயு கசிவால் அவர் தீக் காயங்களுக்கு உள்ளானர்.

தீயை அணைத்த சக மீனவர்கள் அவரைக் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# மாணவிகளிடம் பாலியல் சேட்டை பல ஆசிரியர்கள்மீது முறைப்பாடு!

### திருக்கோவிலில் இந்த அவலநிலை

திருக்கோவில், நவ. 19

**அம்பாறை - திருக்கோவிலில் பாடசாலை ஒன்றின் மாணவிமீது பாலியல் சேட்டை விட முயற்சித்த குற்றச்சாட்டில் கைதான ஆசிரியரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தர விட்டுள்ளார்.**

இதேவேளை, அந்தப் பாடசாலையில் பல ஆசிரியர்கள் மாணவிகளிடம் இவ்வாறான அத்துமீறல் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவிலில் பாடசாலை ஒன்றில் சில மாணவிகள் மீது ஆசியரியர்கள் பாலியல் சேட்டைகளில் ஈடுபடுகின்றனர் என்று சமூக ஊடகங்களில் கருத்துகள் வெளியாகின. இது தொடர்பில் திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கு அமைய பெண்கள், சிறுவர் பிரிவினர் விசாரணை நடத்தினர்.

இதைத் தொடர்ந்து பாடசாலைக்கு சென்ற பொலிஸார் மாணவர்களுக்கு ஒரு விழிப்புணர்வு கூட்டத்தை நடத்தியதுடன் முறைப்பாட்டு பெட்டி ஒன்றையும் வைத்தனர்.

இதனடிப்படையில் சில ஆசிரியர்கள் சில மாணவிகள் மீது தவறான செயல்பாடுகளில் ஈடுபட்டனர் என்று முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவரை பாலியல் சேட்டை விட முயற்சித்த குற்றச்சாட்டில் கடந்த சனிக்கிழமை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். இதனபோதே அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, முறைப்பாடு பெட்டியில் கிடைக்கப்பெற்ற கடிதங்களில் பாலியல் சேட்டையில் ஈடுபட்ட சில ஆசிரியர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும், அது தொடர்பாக ஆராய்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் இந்த விசாரணையின் பின்னர் இன்னும் ஒரு சில ஆசிரியர்கள் கைது செய்யப்படவுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ)

## திருமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் முன்மாதிரி!



திருகோணமலை, நவ. 16

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலத்தில் மக்களுக்கு இலகுவாகவும் - சீராகவும் சேவைகள் வழங்கப்படுவதற்காக பிரதேச செயலாளர் பி. தனேந்திரன் உள்ளிட்ட செயலக பணியாளர்கள் மேற்கொள்ளும் விசேட செயல்திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்தப் பிரதேச செயலகத்துக்கு திங்கள், புதன்கிழமைகளில் சேவைகளை பெறுவதற்காக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வருகை தருகின்றனர். அவர்களுக்கான சேவைகள் கிரமமாகவும் - இலகுவாகவும் கிடைப்ப தற்காக பிரதேச செயலாளர் பி. தனேஸ் வரன் தலைமையிலான பணிக்குழாத்தி னர் சில நடைமுறைகளை பின்பற்றி வரு கின்றனர்.

இந்த நாட்களில் பிரதேச செயலாளர் தம் பிரத்தியேக அலுவலக அறையை விட்டு, செயலக கட்டடத்தின் நுழைவாயில் அருகே அமர்ந்து சேவைகளை வழங்கி வருகிறார். மக்களின் பிரச்னைகள், தேவைகள் இனங்காணப்பட்டு உரிய உத்தியோகத்தர் குழுவிடம் அவர்கள் சேவை பெறலிற்கு அனுப்பப்படுகின்றனர்.

சேவை பெற வரும் மக்கள் அமர்வதற்காக பிரத்தியேக இருக்கை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மக்களுக்கான சேவைகளை சிரமமின்றி குறுகிய நேரத்தினுள் வழங்கும் வகையில் இவ் விசேட ஒழுங்குகள் குறித்த தினங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ஐ)

## காத்தான்குடியில் வர்த்தக நிலையம் தீக்கிரையானது



காத்தான்குடி, நவ. 16

காத்தான்குடியில் கட்டப்பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றில் தீ பரவியதில் அது முற்றாக எரிந்து நாசமானது.

நேற்று பின்னிரவு 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின் ஒழுக்கே தீ பரவலுக்கு காரணம் என்று தெரிய வருகிறது. தீ பரவல் காரணமாக பல கோடி ரூபாய் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## நிந்தவூரில் தொடர் திருட்டு; ஆறு சந்தேகநபர்கள் கைது!



நிந்தவூர், நவ. 16

நிந்தவூர் பிரதேசத்தில் இடம் பெற்று வரும் தொடர்ச்சியான திருட்டு மற்றும் சட்டவிரோத செயல்பாடுகளை ஒழித்துக் கட்டுவதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நிந்தவூர் பகுதியில் குறிப்பாக அரசடித் தோட்டம், அட்டைபள்ளம் போன்ற பிரதேசங்களில் இடம்பெற்று வரும்திருட்டு மற்றும் சட்டவிரோத சம்பவங்கள் தொடர்பில் நிந்தவூர் பொலிஸாருக்கு பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துவருகின்றன.

இதனையடுத்து நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ. எம். எம். நஜீம் மேற்படி குற்றச் செயல்களை ஒழித்துக்கட்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

பொறுப்பதிகாரி நஜீமின் நெறிப்படுத்தலில், பெரும் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி டி.ஆர்.எல்.ஏ.குணவர்த்தன (எஸ்.ஐ.) பொலிஸ் சார்ஜன் களான அமீர், நியாம், சங்கர், மோகன்லால் ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் தீவிர கண்காணிப்பிலும், நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி நிந்தவூர் பொலிஸ் குழுவினரின் நடவடிக்கை காரணமாக நிந்தவூர்ப் பகுதியில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றுடன், கைபேசிகள், ஹெல்மட் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த மூன்று பேரும், அட்டாளைச்சேனையைச் சேர்ந்த இருவரும், நிந்தவூரைச் சேர்ந்த ஒருவருமாக ஆறு சந்தேக நபர்கள் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் பொலிஸாரால் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ - 06)

## தமிழரின் பூர்வீக நிலங்களை அபகரிக்க அனுமதிக்கமாட்டோம்!

### காரைதீவு பிரதேச சபை தவிசாளர்

காரைதீவு, நவ. 16

வடக்கு - கிழக்கில் தமிழர்களின் பூர்வீக நிலங்களை காலாகாலமாக அபகரிப்பதில் பல தரப்பினர் முனைப்புடன் செயற்பட்டு வருகிறார்கள். இதனை உயிர்போனாலும் அனுமதிக்க முடியாது என்று காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - பொத்துவில் பிரதான வீதியில் உள்ள பொத்துவில் சின்ன வட்டிவயல் 17 ஏக்கர் காணி கடந்த 120 வருட காலமாக தமிழனின் உறுதிப் பூமியாக இருந்து வந்தது . இந்த பூமியை உரிமையாளர் 1938ஆம் ஆண்டளவில் ஐந்து ஆலயங்கள் 2 பன்சலைகள் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கும் அன்பளிப்பு செய்திருந்தார்.

அதாவது இந்தக் காணி எந்த சந்தர்ப்பத்திலும் அரசகாணியாக இருந்தது இல்லை. தொடர்ந்து தனியார் உறுதி காணியாக இருந்து வருகிறது. வரலாறு இப்படி இருக்கையில் வெறும் அரசியலுக்காக எதிர்வரும் தேர்தல்களை முன்வைத்து இனங்களிடையை முரண்பாடுகளை வளர்க்க ஒருசாரார் முயற்சி செய்கின்றனர்.


இது அரச காணியோ அல்லது வேறோருவரின் காணியோ அல்ல இது ஆலயங்களின் காணி என்பதை சம்பந்தப்பட்டவர்கள் அறிய வேண்டும். எனவே தேவையில்லாத இனமுரண்பாடுகளை வளர்க்காமல் ஐக்கியத்தோடு வாழ முயற்சிகளை மேற்கொள்ளுங்கள் - மூவினமும் நிம்மதியாக வாழலாம் - என்றார். (ஐ)

# புதிய பனிப்போர் தேவையில்லை - பைடன் சீனாவில் ஜனநாயகம் உள்ளது - ஜின்பிங்!

பாலி, நவ. 16

சீனாவுடன் புதிய பனிப்போருக்கான தேவை உள்ளது. சீனா தாய்வான்மீ போர் தொடுக்கும் என்று கருதவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா - சீனா ஜனாதிபதிகள் நேற்று சந்தித்தனர். இதைத் தொடர்ந்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந்த சந்திப்பின்போது, சுதந்திரம் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவை இலக்கை அடையக்கூடிய மனித குலத்தின் பொதுவான முயற்சிகளாக உள்ளன. சீன கம்யூனிஸ்ட் கட்சியும் அதனை நிலையாக செயல்படுத்த முயற்சிக்கிறது. அமெரிக்காவில் அமெரிக்கா பாணியிலான ஜனநாயகம் உள்ளது. சீனாவில் சீன பாணியிலான ஜனநாயகம் உள்ளது என்று சீன ஜனாதிபதி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

பாலியில் நடைபெறும் ஜி-20 மாநாட்டுக்காக சென்றுள்ள இரு நாட்டு தலைவர்களும் இந்த சந்திப்பை நடத்தினர்.

இந்த சந்திப்பில், உக்ரைனில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதை எதிர்ப்பதாக இரு தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

சமாதானத்துக்கான சீனாவின் வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்தியுள்ள சீன ஜனாதிபதி குழப்பமான பிரச்னைக்கு இலகுவான தீர்வில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

சீனாவால், வடகொரியாவை கட்டுப்படுத்த முடியும் என நான் உறுதியாக கருதுகின்றேன் என தெரிவிப்பது கடினம் என அமெரிக்க ஜனாதிபதி செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் வடகொரியா மற்றுமொரு அணுவாயுத பரிசோதனையில் ஈடுபடுவதை தடுக்கவேண்டிய கடப்பாடு சீனாவுக்கு உள்ளது என சீன ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாக பைடன் தெரிவித்துள்ளார்.

தாய்வான் குறித்தும் அதிகம் பேசப்பட்ட இந்தப் பேச்சில்,

தாய்வான் தொடர்ந்தும் சீனாவின் முக்கிய நலன்களில் ஒன்றாக காணப்படுகின்றது. அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகளில் கடக்க முடியாத முதல் சிவப்பு கோடு அது என சீன ஜனாதிபதி அமெரிக்க ஜனாதிபதியிடம் தெரிவித்தார் என சீன ஊடகம் தெரிவித்துள்ளது.

தாய்வான்மீது சீனா தாக்குதலை மேற்கொள்ளக்கூடும் என சமீப காலங்களில் அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இது உண்மையா? புதிய பனிப்போர் உருவாகின்றதா என செய்தியாளர்கள் ஜோ பைடனிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்கு பதிலளித்துள்ள அவர் புதிய பனிப் போருக்கான தேவையுள்ளதாக நான் உறுதியாக நம்பவில்லை. தாய்வான் மீது தாக்குதலை மேற்கொள்ளும் உடனடி நோக்கம் எதுவும் சீனாவிடம் உள்ளதாக நான் கருதவில்லை - என்றார். (ஐ)

## எகிப்தின் மர்மப்பெண் மம்மியின் முகம் வெளியீடு!





கெய்ரோ, நவ. 16

எகிப்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன் இறந்து ‘மம்மி’ யாக பதப்படுத்தப்பட்ட மர்ம பெண்ணின் முக வடிவத்தை ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

இறந்தவர்கள் மீண்டும் உயிர் பெற்று வருவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களின் உடல்களை பதப்படுத்தி வைக்கும் வழக்கம் எகிப்தில் பின்பற்றப்பட்டு வந்தது. இதன் காரணமாகவே எகிப்தின் பிரமிட்கள் பிரபலமாகின.

இந்த நிலையில், எகிப்தில் பல நூறு வருடங்களுக்கு முன்னர் பதப்படுத்தப்பட்ட மம்மிகள் பல்வேறு ஆச்சரிய தகவல்களை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு அளித்து வருகின்றன. அந்த வகையில் எகிப்தின் மர்ம பெண் என்று அறியப்பட்டு வந்த மம்மி ஒன்றின் முக வடிவத்தை ஆராய்ச்சியாளர்கள் தற்போது வெளியிட்டுள்ளனர்.

பல நூறு வருடங்களுக்கு முன் எகிப்தைச் சேர்ந்த அடையாளம் தெரியாத பெண் ஒருவர் 7 மாதம் கர்ப்பமாக இருக்கும்போது உயிரிழந்தார். அவரின் உடலை மம்மியாக பதப்படுத்தி வைத்துள்ளனர். அவரின் உடலில் உள்ள முக்கிய உறுப்புகள் எல்லாம் எடுக்கப்பட்டு, சிசுவை மட்டும் அவரது உடலின் வலது பக்கத்தில் வைத்து பதப்படுத்தியுள்ளனர். இப்பெண் எப்படி இறந்தார் என்ற தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், அவரின் பதப்படுத்தப்பட்ட உடலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள், அப்பெண்ணின் முக வடிவத்தை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வெளியிட்டுள்ளனர். இந்த முக வடிவத்தை 2டி - 3டி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர். (ஐ)

## அவுஸ்திரேலியாவில் கடும் மழை; ஆயிரக்கணக்கானவர்கள் பாதிப்பு

சிட்னி, நவ. 16



அவுஸ்திரேலியாவில் பெய்து வரும் கடும் மழையால் தெற்கு அவுஸ்திரேலியாவின் பல நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் நியூ சௌத்வேல்ஸ், வடகிழக்கு விக்ரோறியா மாகாணங்களின் பல்வேறு பகுதிகளில் கடும்மழை பெய்துள்ளது. இதனால், பல நகரங்களில் வெள்ளம் சூழ்ந்தது. குடியிருப்புகளுக்குள் மழை நீர் புகுந்ததால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

தெற்கு அவுஸ்திரேலியாவின் புறநகர் பகுதிகளில் மழை வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

நியூ சௌத்வேல்ஸ் பகுதிகளில் வீதிகள், பாலங்கள் மற்றும் விவசாய நிலங்கள் என அனைத்தும் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

சிட்னி நகரில் இருந்து 300 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் மொலோங் நகரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மொலோங் நகரில் வீதியில் தேங்கியிருக்கும் மழைநீரில் வீட்டு உபயோகப் பொருட்கள் தண்ணீரில் மிதந்து செல்லும் காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இந்தக் கடும் மழைக்கு ஒழுங்கற்ற கால நிலையே காரணம் என்று கூறப்படுகிறது. அத்துடன், ஒரு மாதத்தில் பெய்யவேண்டிய மழை ஒரு நாளிலேயே கொட்டித் தீர்த்துள்ளது - என்று கூறப்படுகிறது. (ஐ)



## சயனைட்டைவிட 6,000 மடங்கு அதிக நஞ்சுள்ள தாவரம்!

லண்டன், நவ. 16


சயனைட்டை விட 6,000 மடங்கு அதிக நச்சுள்ள உலகின் கொடிய தாவரத்தை இங்கிலாந்தில் உள்ள பூங்காவில் வளர்க்கப்பட்டது கண்டறியப்பட்டுள்ளது.

‘ரிசினஸ் கம்யூனிஸ்’ என்று அழைக்கப்படும் இந்த தாவரம் ஆமணக்கு வகையை சேர்ந்தது. உலகின் மிக நச்சுத்தன்மை வாய்ந்த தாவரமாக கின்னஸ் புத்தகத்தில் பெயரிடப்பட்டது.

இங்கிலாந்தின் கொல்வின் விரிகுடாவில் உள்ள குயின்ஸ் கார்டன்ஸ் பூங்காவில் ‘ரிசினஸ் கம்யூனிஸ்’ தாவரம் இருப்பதை பெண்மணி ஒருவர் பார்த்து தனது கைபேசியில் படம் பிடித்து, தனது கணவருக்கு அனுப்பி உள்ளார். அந்தப் பெண்ணின் கணவர் அந்த தாவரத்தின் நச்சுத்தன்மையை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இந்த தாவரங்களை கையுறைகளால் கையாள வேண்டும். ‘ரிசினஸ் கம்யூனிஸ்’ தாவரத்தின் விதைகளின் நுகர்வு மிகவும் ஆபத்தானது என்று அவர் கூறினார்.

பின்பு, அவர் பூங்கா நிர்வாகத்தை தொடர்புகொண்டு அந்த தாவரத்தை அகற்றுமாறும், எச்சரிக்கை பலகைகளை நிறுவுமாறு பரிந்துரைத்தார். (ஐ)



# ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகினார் ஆஸி. வீரர்!

*சிட்னி, நவ. 16*

ஐ. பி. எல். 2023 தொடரில் இருந்து விலகுவதாக பிரபல அவுஸ்திரேலிய வீரர் பட் கம்மின்ஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணிகளின் தலைவராக உள்ளார் பட் கம்மின்ஸ். 2022 ஐ. பி. எல். ஏலத்தில் 7.25 கோடி இந்திய ரூபாய்க்கு கம்மின்ஸை எடுத்தது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி. எனினும், 5 போட்டிகளில் மட்டும் விளையாடிய கம்மின்ஸ், இடுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகினார்.

இந்நிலையில், பணிச்சுமை காரணமாக ஐ. பி. எல். 2023 போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார் கம்மின்ஸ். அவர் தனது ருவிற்றர் பக்கத்தில்,

அடுத்த வருட ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகுவது குறித்த கடினமான முடிவை எடுத்துள்ளேன். அடுத்த 12 மாதங்களுக்கு நிறைய டெஸ்ட், ஒருநாள் போட்டிகள் உள்ளன. எனவே ஆஷஷ், உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்பு சிறிது ஓய்வு எடுத்துக் கொள்வேன்.

புரிதலுக்காக கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அருமையான வீரர்களும் பயிற்சியாளர்களும் உள்ளார்கள். விரைவில் கொல்கத்தா அணியுடன் இணைவேன் என நம்புகிறேன் - என்றார். (ஐ)

# ஒரு வருடத்தில் ஓய்வு

## டேவிட் வோர்ணர்



*சிட்னி, நவ. 16*

அடுத்த ஒரு வருடத்தில் ஆஷஷ் தொடருக்குப் பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக பிரபல வீரர் டேவிட் வோர்ணர் தெரிவித்துள்ளார்.

36 வயதான வோர்ணர் அவுஸ்திரேலிய அணிக்காக 2011 முதல் 96 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். 2009 முதல் 138 ஒருநாள், 99 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இந்நிலையில், அடுத்த வருட ஆஷஷ் தொடருக்கு பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக ஒரு நேர்காணலில் வோர்ணர் கூறியுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்துதான் முதலில் விடைபெறுவேன். அப்படித்தான் நடக்கும். அடுத்த இருபது - 20 உலகக் கிண்ணம் 2024இல் நடைபெறும். அடுத்த வருடம் ஒருநாள் உலகக் கிண்ணம். எனவே, டெஸ்ட் கிரிக்கெட்டில் என்னுடைய கடைசி 12 மாதங்களாக இருக்கும். எனக்கு வெள்ளைப் பந்து கிரிக்கெட், இருபது - 20 மிகவும் பிடிக்கும். 2024 இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாட ஆர்வமாக உள்ளேன் - என்றார். (ஐ)

# ஐ. பி. எல்லிலிருந்து பொலார்ட் ஓய்வு!




*பார்படோஸ், நவ. 16*

ஐ. பி. எல். தொடரிலிருந்து ஓய்வு பெறுவதாக மும்பை இந்தியன்ஸ் அணியின் பிரபல வீரர் கிரன் பொலார்ட் அறிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளை சேர்ந்த சகலதுறை வீரரான பொலார்ட் கடந்த ஏப்ரல் மாதம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவர், இருபது - 20 கிரிக்கெட்டில் 600 போட்டிகளில் விளையாடிய முதல் வீரர் என்ற பெருமையை அண்மையில் பெற்றார்.

2010 முதல் ஐ. பி. எல். மற்றும் சம்பியன்ஸ் லீக் போட்டிகளில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடியவர் பொலார்ட். 13 வருடங்களாக மும்பை அணிக்கு விளையாடிய பொலார்ட் 5 முறை அந்த அணி கிண்ணத்தை வெல்ல உதவியாக இருந்தார்.

இந்நிலையில், ஐ. பி. எல். தொடரிலிருந்து ஓய்வு பெறுவதாக பொலார்ட் நேற்று அறிவித்தார். அதில், “இந்த முடிவை எடுப்பது சுலபமாக இல்லை. ஏனெனில் இன்னும் சில வருடங்களுக்கு விளையாட நான் தயாராக இருந்தேன். மும்பை இந்தியன்ஸ் அணியுடன் விவாதித்த பிறகு ஐ. பி. எல். தொடரிலிருந்து ஓய்வு பெற முடிவெடுத்துள்ளேன். என்னால் மும்பை அணிக்குத் தொடர்ந்து விளையாட முடியாது என்றால் அந்த அணிக்கு எதிராகவும் விளையாட முடியாது. மும்பை இந்தியன்ஸ் வீரர் எப்போதும் மும்பை இந்தியன்ஸ் வீரர்தான்.

எனினும் ஐ. பி. எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் துடுப்பாட்டப் பயிற்றுநராக பணியாற்றவுள்ளேன் - என்றார்.

பொலார்ட், ஐ. பி. எல் தொடரில் மும்பை அணிக்காக 189 போட்டிகளில் விளையாடி 16 அரைச்சதங்களுடன் 3412 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 223 சிக்ஸர்களையும் விளாசியுள்ளார். (ஐ)




# இந்தியாவுடனான தொடர்கள் நியூசிலாந்து அணி அறிவிப்பு

*வெலிங்டன், நவ. 16*

இந்தியாவுக்கு எதிரான இருபது -20, ஒருநாள் தொடர்களில் விளையாடவுள்ள நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு பின்னர் இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள், 3 இருபது - 20 தொடர்களில் விளையாடுகிறது. நாளை மறுதினம் தொடங்கும் இருபது - 20 தொடர் 22ஆம் திகதி அன்று முடிவடைகிறது. ஒருநாள் தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகி 30ஆம் திகதி முடிவடைகிறது.

இருபது - 20 தொடருக்கு பாண்டியா தலைமையிலான இந்திய அணியும் ஒருநாள் தொடருக்கு ஷிகர் தவான் தலைமையிலான இந்திய அணியும் பங்கேற்கின்றன.

இந்நிலையில், அறிவிக்கப்பட்ட நியூசிலாந்து அணி விவரம் வருமாறு,

ஒருநாள் அணி - கேன் வில்லியம்சன் (தலைவர்), பின் அலன், மைக்கல் பிரேஸ்வெல், கொன்வே, லாகி பெர்குசன், டேரில் மிட்செல், அடம் மில்ன், ஜிம்மி நீஷம், கிளென் பிளிப்ஸ், மிட்செல் சாண்ட்னர், ரிம் சௌதி, ரொம் லதம் , மேட் ஹென்றி.

இருபது - 20 அணி - கேன் வில்லியம்சன் (தலைவர்), பின் அலன், மைக்கல் பிரேஸ்வெல், கொன்வே, லாகி பெர்குசன், டேரில் மிட்செல், அடம் மில்ன், ஜிம்மி நீஷம், கிளென் பிளிப்ஸ், மிட்செல் சாண்ட்னர், ரிம் சௌதி, இஷ் சொதி, பிளேர் டிக்னர்.

# ஏ. ரி. பி. ரென்னிஸ் தொடர் நடால் அதிர்ச்சி தோல்வி!

*டுரின், நவ. 16*

ஏ. ரி. பி. ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு போட்டி ஒன்றில் அமெரிக்காவின் இளம் வீரர் ரெய்லர் பிரிட்ஸிடம் 7-6, 6-1 என்ற செற் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார் ஜாம்பவான் ரபேல் நடால்.


உலகின் தலைசிறந்த 8 வீரர்கள் பங்கேற்கும் ஆண்டின் இறுதி தொடராக ஏ. ரி. பி. ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

நடப்பு தொடர், இத்தாலியின் டுரின் நகரில் நடைபெறுகிறது. முதல் போட்டியில் நோர்வேயின் கேஸ்பர் ரூட் 7-6, 6-4 என கனடாவின் பெலிக்ஸ் அலியாசிம்மை வீழ்த்தி இருந்தார்.

இந்நிலையில் இரண்டாவது போட்டி நடால்-பிரிட்ஸ் இடையே நடைபெற்றது. முதல் செற்றில் இரு வீரர்களும் மாறி, மாறி புள்ளிகளைப் பெற்றனர். இறுதியில் 7-6 என ரெய்லர் முதல் செற்றை வென்றார்.

இரண்டாவது செற்றில் நடாலுக்கு வாய்ப்பு தராமல் பிரிட்ஸ் முழு ஆதிக்கம் செலுத்தி 6-1 என செற்றைக் கைப்பற்றினார்.

ஏ. ரி. பி. ரென்னிஸ் தொடரில் நடால் ஒருமுறை கூட பட்டம் வெல்லவில்லை. 2010, 2013இல் இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தார். தற்போது மீண்டும் பட்டம் வெல்லும் முனைப்பில் உள்ள நடாலுக்கு முதல் போட்டி தோல்வியில் முடிந்தது. (ஐ)



# தவறை ஏற்றுக்கொள்ளுங்கள் மன்னிக்க தயாராகவுள்ளோம்!


## பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

கொழும்பு, நவ.16

**உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் பின்புலத்தில் இருப்பவர்கள் மறைந்து கொள்ள முயற்சிக்கிறார்கள். இருப்பினும் தங்களின் பாவங்களுக்கு மிகவும் வேதனையான கர்மவினையை சந்திக்க நேரிடும் என்றும் தவறை ஏற்றுக் கொள்ளுங்கள். அதனை நாம் மன்னிப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்று கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது பாதிக்கப்பட்ட 12 குடும்பங்களுக்கு புதிய வீட்டுத் திட்டத்தை வழங்கும் நிகழ்வில் பங்கேற்று பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளிப்படையான விசாரணை முன்னெடுக்கப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி எனக்கு தனிப்பட்ட வகையில் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தமக்கு வந்த மறுநாளே அவர் என்னை தொலைபேசி மூலம்



அழைத்து அவற்றையெல்லாம் எவ்வாறு வெளிப்படையாகக் கூற முடியும்? என்று கேட்டார்.

அறிக்கைகளை சிபாரிசு செய்ய வேண்டியது நீங்கள் இல்லை. இதனை பொலிஸாரிடம், நீதிமன்றத்திடம் ஒப்படையுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். அதற்கு அவர் ஒன்றும் கூறவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அன்று பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தவர். ஏன் அவருடைய பொறுப்புகளை மறைப்பதற்கு முயற்சிக்கிறார். அதன் பின்னணியில் அரசியல் சதி ஒன்று இருப்பதாக பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கையில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் பல தெளிவற்ற விடயங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றை வெளிக் கொணர்வதற்கு எவரும் ஆர்வம் காட்டுவதில்லை.

சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கண்களும் இல்லை. காதுகளும் இல்லை. அதனால் ஒன்றையும் செய்வதற்கு முடியாது உள்ளது. தற்போது நாட்டில் செவிடான யானைகள் மற்றும் ஒரு பெரிய யானையும் அதன் கூட்டத்துடன் வந்து விட்டது. அவர்களிடம் வீணை வாசிப்பது பயனற்றது. சட்டத்தை நினைத்தப்படி மாற்றி இதை வைத்து அதனைக் கை கழுவி விடலாம் என்று நினைக்கிறார்கள். அவ்வாறு நினைத்தால் மற்றவர்களுக்கு நாயகனாகத் தோன்றலாம். ஆனால், ஒன்று நினைவில் இருக்கட்டும். வேதத்தில் உள்ளது. நீங்கள் செய்த பாவங்கள் உங்களை பின் தொடரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# மாணிக்க கல் அகழ்வு 2 சந்தேகநபர்கள் கைது!

நுவரெலியா, நவ. 16

நுவரெலியா, பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிங்காரவத்தை பிரதேசத்தில், சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 43, 63 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (கே)

# அயலவரின் தாக்குதலில் 3 வயது குழந்தை மரணம்!

மாத்தளை, நவ. 16

மாத்தளையில் அயல் வீட்டவரின் தாக்குதலில் மூன்றரை வயதான குழந்தை ஒன்று உயிரிழந்தது.

மாத்தளை - ரன்பிமகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு வீட்டார் இடையே நீண்டகாலமாக பகைமை இருந்து வந்தது. இந்நிலையில், 38 வயது தாய், 19 வயது மகன், 15 வயது மகள் மற்றும் மூன்றரை வயது குழந்தை ஆகியோர் மீது அயலவர் மூர்க்கத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளார். இதிலேயே குழந்தை உயிரிழந்தது. மற்றவர்கள் காயங்களுக்கு இலக்காகினர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மாத்தளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரை கைது செய்துள்ள பொலிஸார், தாக்குதலுக்கு அவர் பயன்படுத்திய கூரிய ஆயுதத்தையும் மீட்டுள்ளனர். (ஐ)

# திடீர் சுகயீனத்தால் மாத்தளையில் 40 மாணவிகள் மருத்துவமனையில்!

மாத்தளை, நவ. 16

மாத்தளையின் பிரபல பெண்கள் கல்லூரி ஒன்றைச் சேர்ந்த சுமார் 40 மாணவிகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை திடீர் சுகயீனமுற்று மாவட்ட மருத்துவமனையில் சேரக்கப்பட்டனர்.

இவ்வாறு மருத்துமனையில் சேர்க்கப்பட்ட மாணவிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வென்னப்புவ பிரதேசத்தில் நடைபெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் பங்கேற்றவர்கள் என்று கூறப்படுகின்றது.



இந்த மாணவிகளுக்கு காய்ச்சல், வாந்தி, தலைவலி போன்ற அறிகுறிகள் காணப்பட்டன என்று மருத்துவமனை தரப்புகள் தெரிவித்தன. (ஐ)

# ஹிருணிகா உள்ளிட்ட 15 பேருக்கு பிணை!

கொழும்பு, நவ.

ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 15 சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்களை தலா 10 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் தலா 50 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்க உத்தரவிட்டார்.

அத்துடன், அவர்களுக்கு எதிரான வழக்கு பெப்ரவரி 13ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

துன்புறுத்தல்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 15 பேர், கறுவாத்தோட்டப் பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டிருந்தனர். (ஐ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்

பதுளை, நவ. 16

காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

பதுளை - மாக்கந்த - பூனாகல பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

கொஸ்லாந்தை நோக்கி பயணித்துக் கொண்டு இருந்த போதே குறித்த நபர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள் ளார்.

சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(கே)

# கார் மோதியதில் நடந்து சென்ற தந்தையும் மகளும் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 16

வீதியில் நடந்து சென்ற தந்தையையும் மகளையும் கார் ஒன்று மோதியதில் இருவரும் உயிரிழந்தனர்.

கம்பஹா, மீரிகம - பஸ்யால வீதியில் கொட்டகந்த சந்திக்கு அண்மையாக இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், 54 வயதான தந்தையும் 14 வயதான மகளுமே உயிரிழந்தனர்.

மேலதிக வகுப்பு முடிவடைந்த பின்னர் தந்தை மகளை வீட்டுக்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து நடந்ததும் கார் சாரதி அங்கிருந்து தப்பியோடியுள்ளார். அவரைக் கைது செய்த பொலிஸார் மருத்துவ சோதனைக்கு உட்படுத்தியதில் அவர் மது போதையில் இருந்தமை தெரிய வந்தது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கம்பளையில் போதை வியாபாரம்; விடுதி சுற்றிவளைப்பு; 8 பேர் கைது!

கண்டி, நவ. 16

போதைப் பொருள் வியாபாரம் - விநியோகம் என்பவற்றை செய்து வந்த விடுதி ஒன்றை சுற்றிவளைத்த பொலிஸார் 8 பேரை கைது செய்தனர். அங்கு பல வகையான போதைப் பொருட்கள், போதைப் பொருள் மூலம் பெறப்பட்ட பணம் என்பவற் றையும் கைப்பற்றியுள்ளனர்.

கண்டி - கம்பளை நகரிலுள்ள விடுதி ஒன்றிலேயே இந்தப் போதைப் பொருள் வர்த்தகம் இடம்பெற்றதாகத் தெரிவிக் கப்பட்டது.

கைதானவர்களில் 31 வயதான விடுதியின் உரிமை யாளரும், போதைப் பொருளை பெறுவதற்காக வந்த 21 - 42 வயதுக்கு இடைப்பட்ட 7 பேரும் அடங்குவர்.

இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

எவருக்கும் இலகுவில் சந்தேகம் ஏற்படாத வகை யில் இந்த விடுதி நடத்தப் பட்டதாகவும், இந்த விடுதிக்கு பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் அடிக்கடி வந்து சென்றுள்ளனர். இந்த விடுதியின் செயல்பாடுகளில் சந்தேகமடைந்த கண்காணிப்பு பொலிஸார் நீண்டநாட்கள் நடத்திய புலனாய்வு நடவடிக்கையில் போதைப் பொருள் விற்பனை இடம்பெறுவது உறுதி செய்யப்பட்டது.

அத்துடன், விடுதியின் மாடியில் 3 அறைகளில் போதைப் பொருள் வர்த்தகம் இடம்பெற்றதாக விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேசமயம், விடுதியில் இருந்தவாறே வெளிச்சூழல் நடமாட்டத்தை கண்கா ணிக்க இரகசிய வழிகளும் அங்கு இருந்தமை தெரிய வந்துள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பல வகை போதைப் பொருட்களுடன் போதை வர்த்தகம் மூலம் பெறப்பட்ட ஒரு இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## 20ஆம் திகதி...

நெருக்கடியை சந்தித்துள்ள - வீழ்ச்சிய டைந்துள்ள நிலையில் அந்தக் கட்சியை மீளக் கட்டியெழுப்பவே அவர் நாடு திரும்புகிறார் என்று கூறப்படுகின்றது.

அமெரிக்காவில் தங்கியுள்ள பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடன் அமைச்சரவை மாற்றம் தொடர்பில் கலந்துரையாடினார் என்று அறிய வருகிறது.

வரவு - செலவு திட்டம் மீதான வாக் கெடுப்பு பாராளுமன்றில் நடைபெற்று டிசெம்பர் 8ஆம் திகதி இறுதி வாக் கெடுப்பு நடைபெறவுள்ளது. இந்தச் சமயத்தில் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்ப வுள்ளமை அரசியல் மட்டங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## பதவி...

கொழும்பு உதவி ஆயர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

75 வயதை எட்டியதும் பேராயர் தனது பதவியை விட்டு விலகுவது பாரம்பரியமாகும். எனவே இது தொடர்பான கடிதத்தை பாப்பரச ருக்கு அனுப்ப கர்தினால் ரஞ்சித் ஏற்பாடு செய் துள்ளார் என்று தெரிய வருகின்றது.

எனினும், பாப்பரசரின் பதில் கிடைக்கும்வரை மல்கம் ரஞ்சித் பேராயராகப் பதவியில் தொடர்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## படையினருக்கு...

அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஆளுநர் செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தை நடத்தினர். இதனால், அந்த சந்திப்பு தடைப்பட்டது.

இதையடுத்து மெய்நிகர் வழியில் கூட்டத்தை கூட்டினார் ஆளுநர். கூட்டத்தில் ஆளுநரின் செயலர், படையினருக்கு காணி வழங்க உரிமையாளர்கள் விரும்பவில்லை. இதுவே பெரிய பிரச்னை. யாழ்ப்பா ணத்தில் 68 இடங்களில் அளவீட்டு பிரச்னை உள்ளதாக காணி அமைச்சு தெரிவித்துள்ளது.

நில அளவீட்டுக்கு மக்கள் தமது எல்லையை காண்பிக்க வேண்டும். அத்தோடு எதிர்ப்பு இருந்தால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அப்படி இல்லையேல், அளவீட்டு உத்தியோகத் தர்களுக்கு முழுமையான பாதுகாப்பை பிரதேச செயலாளர்கள் பொறுப்பேற்று பொலிஸ் பாதுகப்புடன் கூட்டிச் சென்றால் மட்டுமே முடியும் என்றார்.

இதற்கு பிரதேச செயலர்கள் தம்மால் அது முடியாது என்று கூறிவிட்டனர்.

இதேநேரம், தனியார் காணிகள் 68இல் உரிமையாளர்கள் விரும்பாமை மற்றும் அரச திணைக்களங்களுக்கு சொந்தமான காணிகளே உள்ளன. பல திணைக்களங்களுக்கு சொந்தமான அந்தக் காணிகளை வழங்கும் உரிமை பிரதேச செயலரிடம் இல்லை. அந்தத் திணைக்களங்களே காணிகளை வழங்க சம்மதக் கடிதம் வழங்க வேண்டும். அப்படி வழங்கினால் மட்டுமே அள வீடு சாத்தியம் என்றனர்.

இதன்படி, யாழ்ப்பாணத்தில் மட் டும் கடற்படையினர் 58 இடங்களை கோருகின்றனர். இதில், 43 இடங்கள் அரச காணி என்று கூறப்படுகின்றது. கிளிநொச்சி - பளை, பரந்தன் காணி விடயங்கள் தொடர்பிலும் இதன் போது ஆராயப்பட்டது.

கூட்டத்தில் பங்கேற்ற ஆளுநர், மக் களின் நிலங்கள் தொடர்பில் உள்ள பிரச் னைகளை இனம்காணவே இந்தக் கூட் டமே தவிர, படையினருக்கு அபகரிக்க இக்கூட்டம் அல்ல என்று கூறினார்.(ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் - 06 இல்)

## பால்...

உடனடியாக மருத்துவமனைக்கு குழந்தையை கொண்டு சென்ற நிலை யில் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகளை யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசி வாயம் பிறேமகுமார் நடத்தினார். (ஐ)

## தமிழரின்...

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் பிரிவின் இயக்குநர் அடங்கலான குழுவினரை நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துக் கலந்துரை யாடினர். இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத் தில் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இடம்பெற்ற இந்த சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார் பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன், பங்காளி கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கல நாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் அரசியல் உறுதிப் பாடற்ற நிலைமை பற்றியும் வடக்கு, கிழக்கில் தொடர்ந்து இடம்பெறும் நில ஆக்கிரமிப்பு பற்றியும் கூட்ட மைப்பு வலியுறுத்தியது என்று சுமந்தி ரன் எம். பி. கூறினார். (ஐ-2)

## இலங்கை...

கருத்தில் கொள்ளமாட்டோம். ஏனென்றால், முன்னெடுக்கும் விட யங்கள் மிகவும் கடினமாக இருக்கும். நாங்கள் ஒரு சிறிய நாடு. நம்மை நாமே திணிக்க முடியது", என்றார்.

இதேவேளை, இலங்கைக்கான நோர் வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹய்ம் சர்வதேச காலநிலை ஆலோசகராக மீண்டும் இலங்கை வந்துள்ளமை குறித்து எழுப்பப்பட்ட வினாவுக்கு பதிலளித்த அவர்,

சொல்ஹெய்ம் நோர்வேயின் உத்தி யோகபூர்வ பிரதிநிதி அல்ல. அவர் தனது தனிப்பட்ட திறன் - தொடர்பி லேயே செயல்படுகிறார் - என்றும் கூறினார். (ஐ)

## தமிழ்க்...

சோ. சேனாதிராசா ஆகியோருக்கு தெரிவித்துள்ளார்.

தமிழர் பிரச்னைத் தீர்வு தொடர்பில் வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துப் பேசவுள்ளார் என்று ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்த சந்திப்பில் தமிழ் மக்கள் சார்பில் பேசப்பட வேண்டிய விடயங் கள் தொடர்பில் ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத் தில் கூடுமாறு அறிவித்திருந்தார். நேற்று இந்தக் கூட்டம் இடம்பெறு வதாக அறிவிக்கப்பட்டது.

எனினும், இந்தக் கூட்டத்துக்கு தமிழ் கட்சிகளின் தலைவர்கள் அழைக்கப்பட்ட முறைமை தொடர் பில் சர்ச்சை எழுந்தது. இந்நிலை யிலேயே இந்தக் கூட்டம் ஒத்திவைக் கப்பட்டது.

இந்நிலையிலேயே கூட்டத்தை நடத்துவது தொடர்பில் இரா. சம்பந் தன் சில ஆலோசனைகளை வழங்கிய துடன், அனைவரும் பங்கேற்கக்கூடிய பொது இடத்தில் நடத்துமாறும் கூறி யுள்ளார். (ஐ)

# சுயாதீன குழுக்கள் அமைப்பதை நான் காலதாமதப்படுத்தவில்லை!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, நவ. 16

சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைப் பதை நான் எந்தவகையிலும் காலதாம தப்படுத்தவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், "மக்களின் வரிப்பணத்தில் நடத்திச் செல்லப்படும் ஊடகமொன்று எனது பெயருக்கு அபகீர்த்தியை ஏற் படுத்தும் வகையிலான செய்திகளை வெளியிடுகின்றது.

குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவரின் செயல்பாட்டால் சுயாதீன ஆணைக் குழுக்களை அமைப்பதில் காலதாமதம் ஏற்பட்டு இருப்பதாக அந்த ஊடகமா னது செய்திகளை வெளியிட்டு இருக் கின்றது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைப் பதை சிவில் சமூகத்தினர் தொடர்ச்சி யாக வலியுறுத்தி வருகின்றனர். அரசமைப்பு பேரவை என்பது 21ஆவது திருத்தத்துக்கு எதிர்க்கட்சி ஆதரவளித் ததன் காரணமாகவே செயல்படுத் தப்பட்டது.

எமது கட்சியின் ஆதரவின்றேல் 21ஆவது திருத்தத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தி ருக்காது. சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கவும் முடியாது. எனவே, இவ்விடயம் குறித்து, சபாநாயகர் தெளி வுபடுத்தலை வழங்க வேண்டியது அவசியமாகும்.

சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதை நான் தாமதப்படுத்தி னேனா? அல்லது ஆணைக்குழுக்கள் அமைக்கும் செயல்பாட்டை முறியடிப் பதற்கு முயற்சித்தேனா என்பதை சபா நாயகர் தெளிப்படுத்த வேண்டும் - என்றார்.

# கொல்லப்பட்ட எம்.பியின் குடும்பத்துக்கு நிதியுதவி!

கொழும்பு, நவ. 16

மே மாதம் 9 ஆம் திகதி இடம் பெற்ற கலவரத்தின்போது கொலை செய் யப்பட்ட சிறீ லங்கா பொதுஜன பெர முனவின் பொலநறுவை மாவட்ட முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமர கீர்த்தி அத்துகோரளவின் மனைவிக்கு நேற்று நிதியுதவி வழங்கப்பட்டது.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதி யில் நேற்று நடைபெற்ற ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டத்தின் பின்னர் நிதியுதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வும் இணைந்து கையளித்தனர்.

அமரகீர்த்தி அத்துகோரளவுக்காக 183 பாராளுமன்ற உறுப்பினர்கள் நிதிப் பங்களிப்பை வழங்கினர்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் மாதிவெல வீடமைப்புத் தொகுதியில் உள்ள ஆளுங்கட்சியைச் சேர்ந்த 20 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட "மாதிவெல மிதுரோ" கழகம் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவுக்காக இந்நிதியை சேகரிக்க ஆரம்பித்ததாக வும் அதன் பின்னர் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்தமை விசேட அம்சம் என்றும் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ இதன்போது தெரிவித்தார்.

கொல்லப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோர ளவுக்கு ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யுமாறு பிரதி சபாநாயகர் ஜனாதி பதியிடம் கோரிக்கை விடுத்தார். (ஐ)

## பலாலி விமான...

செயல்பாடுகள் தொடர்பில் ஆராய் வதற்காக இராஜாங்க அமைச்சர் நேற்று யாழ்ப்பாணம் வந்தார். அவர் காங் கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையத்தை பார்வையிட்ட அவர் அவற்றின் மேம்பாடு தொடர் பாக அதிகாரிகளுடன் உரையாடினார்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்,

நாட்டுக்கு பெரும் வருமானத்தை ஈட்டித் தந்தது காங்கேசன்துறை துறைமுகம். நாட்டில் ஏற்பட்ட அசா தாரண சூழ்நிலை காரணமாக அழிவ டைந்து தற்போது பயன்பாட்டில் இல்லை. இவ்வாறான சம்பவங்கள் மூலமே எமது நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு நாங்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

அந்தப் பொருளாதார நெருக்கடி யில் இருந்து நாங்கள் மீள வேண்டு மாக இருந்தால், காங்கேசன்துறை போன்ற பொருளாதாரத்தை ஈட்டக் கூடிய இடங்களை நாங்கள் மீள புதுப் பித்து அவற்றை செயல்படுத்துவதன் மூலமே நாட்டுக்கு வருமானம் கிடைக்கும்.

இதற்காக இந்திய நாட்டின் உதவியையும் நாங்கள் கோரவுள்ளோம் . ஏற்கனவே நாங்கள் இந்திய நாட்டின் உதவியுடன் சில வேலைத் திட்டங் களை இங்கே முன்னெடுத்துள்ளோம். ஆனால், இங்கே பல வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள் ளன. அவற்றை விரைவில் ஆரம்பித்து காங்கேசன்துறை துறைமுகத்தை விரைவில் இயங்க செய்வோம்.

இதேபோன்று, பலாலி சர்வதேச விமான நிலையமும் நமக்கு வருமா னத்தை ஈட்டித்தரக்கூடியது. அந்த விமான நிலையமும் ஓரிரு மாதங்களில் செயல்படுத்தப்படும் - என்றார்.

இதன்போது, "அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியாதான் விமான நிலையத்தை செயல்படுத்த தடையாக உள்ளது", என்று கூறியமை தொடர் பில் எழுப்பிய வினாவுக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர்,

"முதலில் அவ்வாறு பிரச்னை இருந்தது. ஆனால், அவர்களுடன் பேசி சமரசமாகி தற்போது எல்லா விடயங்களும் நிறைவடைந்து விட் டன. ஓரிரு மாதங்களில் பலாலி விமான சேவை ஆரம்பிக்கப்படவுள் ளது. அவ்வாறு ஆரம்பித்தால் இலங் கையில் உள்ள மூவின மக்களும் குறிப்பாக வடக்கு - கிழக்கில் உள்ள மக்களும் ஒன்றிணைந்து இந்த நாட் டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும். இவை விரைவில் சாத்தியப் பட வேண்டும் - என்றார். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# சகல அரசியல் கைதிகளும் விடுதலையாக வேண்டும்!

## அரசியல் கைதிகளின் உறவுகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 16

**27 வருடங்களாக தமிழ் அரசியல் கைதியாக சிறையில் இருக்கின்ற எனது சகோதரனை விடுவிக்க வேண்டும் என்று அரசியல் கைதி விக்னேஸ்வரநாதன் பார்த்தீபனின் சகோதரி வாஹினி கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன், சிறையில் அரசியல்கைதி என எவரும் இருக்க கூடாது. அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்று அவர் உருக்கமான கோரிக்கையை விடுத்துள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும், “எங்கள் அண்ணாவும் நானும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நீண்ட காலமாக விடுதலை விடுதலை எனக்கூறியபோதும் இன்றுவரை அந்த விடுதலை கிடைக்கவில்லை. எதிர்வரும் பொங்கலுக்குள் அண்ணா வருவார் என்று நம்புகிறோம். அம்மா, அப்பா இல்லாத நேரத்தில் எங்களுடன் இணைந்து அண்ணா இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

அண்ணா 18 வயதில் சிறைசென்று 46 வயதாகிவிட்டது. அண்ணாவின் விடுதலையை எதிர்பார்த்து அம்மா உயிரிழந்துவிட்டார். அண்ணாவின் வாழ்க்கை சிறையில் முடிந்துவிடாமல் அவரை பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனைய அரசியல் கைதிகளும் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த ஊடக சந்திப்பில், அண்மையில் விடுதலையான தமிழ் அரசியல் கைதி வேலாயுதம் வரதராஜன் கருத்து தெரிவிக்கையில்,

23 வருட சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை பெற்று வந்துள்ளேன். எனது குடும்பத்துடன் இணைந்து மகிழ்வாக இருக்கின்றேன். அனைத்து தமிழரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

எமது விடுதலையை சாத்தியப்படுத்திய ஜனாதிபதிக்கும் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கும் மிக்க நன்றிகளை தெரியப்படுத்த விரும்புகிறேன். எமது விடுதலைக்காக இதயசுத்தியுடன் செயற்பட்ட ஒவ்வொரு அமைப்புகளுக்கும் இவ்விடத்தில் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதி அரசியல் கைதி விடுதலை செய்யப்படும் வரை இந்த விடயத்தை தொடர்ந்து முன்னெடுத்து அவர்கள் குடும்பத்தினருடன் இணைந்து மகிழ்வாக வாழ வழிசெய்ய வேண்டும். அத்துடன், அண்மையில் விடுவிக்கப்பட 8 அரசியல் கைதிகளுக்கும் அமைப்பு ஒன்றால் உதவிதொகை வழங்கப்பட்டது. அவர்களுக்கு இந்நேரம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் - என்றார்.

இதேவேளை குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன் கருத்து தெரிவிக்கையில்,

சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் 33 பேர் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களையும் விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## வனவிலங்குகளால் வருடாந்தம் 5,400 கோடி ரூபாய் பயிர் சேதம்!



கொழும்பு, நவ. 16

வன விலங்குகளால் இலங்கையில் வருடாந்தம் 54 பில்லியன் ரூபாய் பயிர் சேதம் ஏற்படுகின்றன என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பயிர்களுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தும் விலங்குகளில் காட்டு யானைகள், குரங்குகள், மயில்கள், முள்ளம்பன்றிகள், இராட்சத அணில்கள் மற்றும் காட்டுப்பன்றிகள் ஆகியவை அடங்கும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

காட்டு யானைகள் தவிர ஐந்து விலங்குகள் அதிக பயிர் சேதத்தை ஏற்படுத்தும் விலங்குகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தொகுத்துள்ள அறிக்கையில் பயிர் சேத விபரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. (ஐ)

## அதிக விலைக்கு முட்டை விற்பனை 271 வர்த்தகர்கள்மீது நடவடிக்கை!

கொழும்பு, நவ. 16

அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த 271 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

50 ரூபாய்க்கும் அதிக விலையில் முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்பவர்களைக் கண்டறிய தொடர்ந்தும் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுவதாக அதிகார சபை குறிப்பிட்டது.

அத்துடன், முட்டைகளை மறைத்து வைத்திருந்த 22 வர்த்தகர்களுக்கு எதிராகவும் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

43 முதல் 45 ரூபாய்க்கு இடைப்பட்ட விலைகளில் முட்டை விற்பனை செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டு நுவர்வோர் விவகார அதிகார சபையால் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் பெண்கள் பிரச்னையை அறிவிக்கத் தொலைபேசி எண்!

கொழும்பு, நவ. 16

சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வு காண இரண்டு தொலைபேசி எண்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை 1929 என்ற எண்ணுக்கு 24 மணி நேரமும் தெரிவிக்கலாம்.

இதேபோன்று, பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளை 1938 என்ற எண்ணுக்கு வேலை நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.15 மணி வரை தெரிவிக்கலாம்.

சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தெரிவிக்க முடியும். (ஐ)

## 4,000 தொழுநோயாளர்கள் சமூகத்தில் இருக்கின்றனர்

கொழும்பு, நவ. 16

சமூகத்தில் சுமார் 4 ஆயிரம் தொழுநோயாளிகள் இருக்கின்றனர் என்று சுகாதார அதிகாரிகளுக்கு பதிவாகவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொழுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர இதனை தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டின் முதல் 7 மாதங்களில், 450இற்கும் மேற்பட்ட தொழுநோயாளிகள் இந்நாட்டில் சிகிச்சை பெற்றுள்ளனர். (ஐ)




## வரவு - செலவு திட்டம் வெறும் காற்றடைத்த பந்து!



### அத்துரலிய ரத்ன தேரர்

கொழும்பு, நவ. 16

நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த வரவு - செலவு திட்டமானது, காற்றடைத்த பந்தைப் போன்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், “நாடு முன்னெப்போதும் இல்லாத அளவில் மிகத் தீவிரமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு இருக்கும் தருணத்திலேயே, 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் காலை வேளையில் சுமார் 14, 15 நிமிடங்கள் எழுந்து நின்றால் மயங்கி விழும் நிலைமையே நாட்டில் தற்போது காணப்படுகின்றது. விசேடமாக நகரங்களில் மிகவும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பிரதேசங்களில் கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள் பெருமளவில் உணவுப் பிரச்னைக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அது மட்டுமல்லாது அன்றன்று உழைத்து வாழும் கூலித் தொழிலாளர்கள், விசேடமாக நகரப் பகுதிகளில் வசித்துவரும் கூலித்தொழிலாளர்கள், கூலி வேளைகளுமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு நிலைமையிலேயே இந்த 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த சமூகமும் பெரிய பாதிப்பை எதிர்கொண்டு இருக்கின்றது.

நாட்டின் நெருக்கடிகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்கு அறிவார். எனினும், அவர் சமர்ப்பித்த 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் நாட்டின் பிரச்சினைகளுக்கு எவ்விதத் தீர்வும் முன்வைக்கப்படவில்லை. இந்த வரவு - செலவுத் திட்டமானது வெறும் காற்றடைத்த பந்தை போன்றே உள்ளது - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.